உ
கணபதிதுணை.
திருக்கைலாசபரம்பரைப
பெர்ம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்து
நல்லாற்றூர்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்த

# ஸ்ரீ சிவஞானபாலையதேசிகர்

# தாலாட்டு

முதலியபிரபந்தங்கள்.

இவை,
ஷை ஆதீனம் பதினான்காவது குருமூர்த்தியாய்விளங்கிய
ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலையதேசிகசுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
இத்தேசிகசுவாமிகள்மாணாக்கர் சிதம்பரம் ஈசானியமடம்
**இராமலிங்கசுவாமிகளால்**
பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து
அரிதுவரைந்த அருஞ்செய்யுளுரைக்குறிப்போடு,

சென்னை:
கலாரத்நாகர அச்சியந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

பராபவஞு இடபரவி.

1906.

சிவமயம்.

க. சிவஞானபாலையதேசிகர்தாலாட்டு.
உ. ,, நெஞ்சுவிடுதூது.
௩. ,, திருப்பள்ளியெழுச்சி.
ச. ,, பிள்ளைத்தமிழ்.
ரு. ,, கலம்பகம்.

விலை அணா - ச.

*தாலாட்டில் பெரிதும் வீரசைவ விஷயங்களே கூறப்பட்டிருத்தலின் அதற்குத்தனியே உரையொன்று வெளியிடப்படும்,*

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

பொம்மபுரம்.

# ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகர்

# தாலாட்டு.

காப்பு. நேரிசைவெண்பா.

அவஞானம் போக்கி யருண்ஞான மாக்குஞ்
சிவஞான தேவன் றிருமுன் - றவஞானத்
தாலாட் டெனுந்தமிழைச் சாற்றுதற்கு நற்றுணையா
மாலாட்டு மாமுகத்தன் வந்து.

---

திருவருளா லென்னைத் தெரிவிக்க விங்குத்
திருவுருவாய் வந்த சிவஞான தேசிகனே. (௧)

என்றுநித்த பூரணமா யின்பவறி வுண்மையாய்
நின்றபடி நிற்கு நிகழ்பிரம மென்றானே. (௨)

தன்சத்தி யாலாந் தலமங்க லிங்கமென
வென்சத்தி பாதத் தெழுந்தருளிச் சொன்னானே. (௩)

நன்பாகு மிட்டலிங்க நன்றாம் பிராணலிங்க
மொண்பாவ லிங்கமா மோர்பொருளிங் கென்றானே. (௪)

ஆசார லிங்கமுட னாருங் குருலிங்கந்
தேசாரு மிட்டலிங்கஞ் சேர்ந்தாகு மென்றானே. (௫)

அந்தப் பிராணலிங்கத் தாகுஞ் சிவலிங்க
மிந்தச் சரலிங்க மென்றசிவ ஞானியே. (௬)

பாவலிங்கந் தன்னிற் பரமப் பிரசாதந்
தாவகன்ற மாலிங்கஞ் சார்ந்துவரு மென்றானே. (௭)

ஏகாங்க மேயாகு மின்பத் தியாகாங்கம்
போகாங்கம் யோகாங்கம் போற்றியறி யென்றானே. (௮)

பத்தனுமா கேசனுமாம் பன்னுந் தியாகாங்க
முய்த்துணரி னென்ன வுணர்த்தும் பெருமானே. (௯)

பிரசாதி யோடு பிராணலிங்கி யாகு
முறைசாரு போகாங்க மொன்றென்று சொன்னானே. (௧௦)

சாற்றுமியோ காங்கஞ் சரண னையிக்கியனும்
போற்றிநீ காணென்று போதித்த தேசிகனே. (௧௧)

அங்க நவவிதமு மந்நவ லிங்கமொடு
தங்கு மெனவெனக்குச் சாற்றும் பெருமானே. (௧௨)

விழுங்கல் பருகலொடு மெல்லலா சார
மொழுங்கிற் குருசிவமு முற்றிடுமிங் கென்றானே. (௧௩)

சோகிய லேகியமுஞ் சொன்ன விவற்றறிவு
மேகியுறும் பின்மூன் றிலிங்கத்து மென்றானே. (௧௪)

இந்தக்கா யார்ப்பணங்க ளிட்டலிங்கத் தென்றெனக்குச்
சந்தப் படவுரைத்துத் தந்தசிவ ஞானியோ (௧௫)

பீடமிடை வட்டம் பெருங்கோ முகநாள
மாடலுறு கோளகமா சாராதிக் கென்றானே. (௧௬)

நாற்றஞ் சுவையுருவ நல்லூ றொலிநிறைவு
சாற்றுஞ் சடுலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (௧௭)

வேர்முதலாங் கந்தம் விளங்கு மரமுதலாங்
கூர்மணமா சாரங் குருவினிலா மென்றானே. (௧௮)

தளிராதி கந்தமுகை தான்முதலாங் கந்த
மொளிரார் சிவசரத்தி னுற்றிடுமிங் கென்றானே. (௧௯)

காய்முதலாங் கந்தமெலாங் காசில்பர சாதத்துந்
தூய்மலிமா லிங்கத்துந் துன்னுமெனச் சொன்னானே. (௨௦)

மதுரந் துவர்கார்ப்பு வண்புளிகைப் பெல்லாஞ்
சதுரொன் றிருத்தியவா சாராதிக் கென்றானே. (௨௧)
பொன்மைவெண்மை பச்சைசெம்மை போந்த கருமையெலா
நன்மையவா சாராதி நண்ணுமென்ற நாயகனே. (௨௨)
வன்மைமென்மை வெம்மைதண்மை வாய்ந்த மிசிரமெலாஞ்
சின்மையவா சாராதி சேர்ந்துகொளு மென்றானே. (௨௩)
கஞ்ச நரம்புதோல் கண்டகுழ லாதியொலி
யஞ்சொலிவை யெல்லாமவ் வாறுமுறு மென்றானே. (௨௪)
மணமுதலா மைந்து வகைநிறைவெ லாமு
ணுமுறையா சாராதி நாடிலெனச் சொன்னானே. (௨௫)
இம்முறையா றாறு மிலங்குகா ணார்ப்பிதமென்
றெம்மறிவு கொள்ள வியம்புசிவ ஞானியே. (௨௬)
தொட்டறிந்திங் கொன்றைத் துணிந்து நுகர்ந்துமகிழ்ந்
திட்டமைந்து நிற்கு மிலிங்கங்க ளென்றானே. (௨௭)
கூறுமிவை யாவினுமிக் கொள்கை பெறுமிலிங்க
மேறு மிரட்டுநூற் றெட்டாகு மென்றானே. (௨௮)
உருவஞ் சுவைநிறைவா யோங்கர்ப் பிதங்கண்
மருவுந் திறஞ்சொன் மயிலை மலைவிளக்கோ. (௨௯)
சுத்தசித்த மோடுபிர சித்தமெனத் தோன்றுபுபா
சத்தமுத்த மாக்குபிர சாதமரு னாயகனே. (௩0)
அங்கலிங்க சத்திபத்தி யத்தமுக வர்ப்பிதசே
டங்களிவை யட்ட சயிலமெனச் சொன்னானே. (௩௧)
குசித்த மழிந்து குடும்பநோய் மாற்றுஞ்
சுசித்தமதி லாசாரந் தோன்றுமெனச் சொன்னானே. (௩௨)
குபுத்தி யழிந்து குருநெறியி னிற்குஞ்
சுபுத்திதனி னிற்குஞ் சுடர்குருவிங் கென்றானே. (௩௩)

---

(௨௨) பச்சை மாஞ்சிட்டபோரங்களெலாம் என்றும்பாடம்.

ஆங்கார மில்லா நிராங்கார வத்தமதி
னீங்கா திலகு நிகழ்த்துசிவ மென்றானே. (௩௪)

கமன மழிந்து கறையற்று நிற்குஞ்
சுமனமதி னின்றிலகுந் தூயசர மென்றானே. (௩௫)

மெய்ஞ்ஞான மாகி மிளிரும் பிரசாதஞ்
சுஞ்ஞான வத்தமதிற் றோன்றுமெனச் சொன்னானே. (௩௬)

துற்பாவ நீங்கித் துணிவுபடு மத்துவித
சற்பாவ மாலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (௩௭)

ஆதார பீடங்க ளாறினுமவ் வாறிலிங்க
மீதாக வைத்து விளங்கச்செய் வித்தகனே. (௩௮)

ஆறு முகங்களுமவ் வாறுசா தாக்கியமு
மாறு வருணமுமா மாறிலிங்க மென்றானே. (௩௯)

பத்தனொடு மாயேசன் பார்ப்பரிய வாசார
மெய்த்தகுரு நான்கும் விளங்குகுரு வென்றானே. (௪0)

பிரசா தியுமப் பிராணலிங்கி தானு
முரைசால் சிவசரமு மோங்கிலிங்க மென்றானே. (௪௧)

ஒழிந்தவங்க லிங்க மொருநான்கு நம்பா
லெழுந்தருளுஞ் சங்கமமென் றின்பந் தருவானே. (௪௨)

உருவ முருவருவ முற்றறிதற் கெட்டா
வருவமென நின்றிடுமவ் வாறுமெனச் சொன்னானே. (௪௩)

மாசுதரு தூலாதி மாணவிசு வாதியே
யாகி நியாகாங்க மாதியா மென்றானே. (௪௪)

விரிந்தன வெலாமும் விரிந்தமுறை சென்றே
யொருங்கியங்க லிங்க வுபயமா மென்றானே. (௪௫)

கடத்தி னுபாதியா காயமுற்ற வாபோ
லடுத்த வுபாதியா லங்கலிங்க மென்றானே. (௪௬)

தங்கு மிலிங்கமாந் தற்பதமத் தொம்பதமே
யங்க மயிக்கிய மசிபதமென் றாண்டானோ. (௪௭)

ஆக முயிர் துரிய னாய்நின்ற போதெமைத்தான்
சோகமனத் தானாகத் தோன்றும் பெருமானோ. (௪௮)

அமைத்தபராஞ் சுத்தத் தசுத்தமதிற் சிவன்
றமைப்பகுதி யிற்றோன்றுந் தத்துவங்க ளென்றானோ. (௪௯)

நிரஞ்சன சூனியமா நிட்களத்திற் சித்து
வருஞ்சுடர்சின் னாதாதி வாய்ப்பவெனச் சொன்னானோ. (௫௦)

மூலசித்து நாதாதி மூன்றும் புணர்ந்தாகு
மாலகற்றுஞ் சோதிமய மாலிங்க மென்றானோ. (௫௧)

அகராதி மாலிங்கத் தாகியவை கூடித்
தகவாமோங் கார சதாசிவமா மென்றானோ. (௫௨)

அந்தச் சதாசிவத்தி னைம்முகத்து மைம்பூதம்
வந்துற் றிதயத்தான் மாவருமிங் கென்றானோ. (௫௩)

அப்பூதம் பஞ்சீ கரித்திருபத் தைந்தாகி
மைப்பூணா மான்மாவை மன்னியிடு மென்றானோ. (௫௪)

ஆணவத்தான் மூடனா மாருயிர்க்கு முன்வினையான்
மாண வளிக்குமிறை மாயையவடி வென்றானோ. (௫௫)

மேலைவினை யாலுழலு மெய்யுயிர்க்குப் பாகமலக்
காலமுறச் சுத்தக் கரணமா மென்றானோ. (௫௬)

கூறுமனச் சுத்தமுறக் கொண்டுபிண்ட நாமத்தை
நூறு தலநெறியு நோக்குமெனச் சொன்னானோ. (௫௭)

கிரியை மன பாவங் கிடைப்பரிய ஞான
மருவிவிடா தங்கம் வயங்குமெனச் சொன்னானோ. (௫௮)

ஞாதிருவு நின்றறியு ஞானஞே யங்களுமற்
றேதமற வென்று மிருந்தபடி வைப்பானோ. (௫௯)

வானேத்த வென்று மருவற் கரியபத
கானேத்த நல்குசிவ ஞானகுரு தேசிகனோ. (௬௦)
மிடியற் கெளிது விழியுற்ற பொன்போ
லடியற்கு வந்திங் ககப்பட்ட வாரமுதோ. (௬௧)
கயிலைமலை மேவுங் கடைப்பிடியாற் சீர்சான்
மயிலைமலை மீதிங்கு வந்தமர்ந்த மாமணியோ. (௬௨)
எல்லாக் கலையுணர்ந்து மெய்தாய் பொருளையொரு
சொல்லாற் றிகழ்த்துதற்குத் தோன்றும் பெருமானோ (௬௩)
சீலந் திகழ்த்துமதிச் சின்னமின்றி யும்படியோர்
கோலஞ் சிவமெனவுட் கொள்ளுமருட் குன்றமோ. (௬௪)
மண்களிக்க நாயேன் மனங்களிக்கக் கண்டுகொண்டு
கண்களிக்க வந்த கருணைப் பெருங்கடலோ. (௬௫)
சம்பந்த னன்றொருநாட் டானுண்ட பானாளு
மெம்பந்த நீங்க வினிதமுது செய்தானோ. (௬௬)
வேண்டுவவெல் லாமுமாம் வெண்ணீ றளிப்பதற்குத்
நீண்டு மலர்க்கைச் சிவஞான தேசிகனோ. (௬௭)
இம்மை மறுமை யிரண்டும் பெறவெமக்குச்
செம்மைதர வந்த சிவஞான தேசிகனோ. (௬௮)
அரசமய மன்றி யகங்களித்தெஞ் ஞான்றும்
பரசமய மும்பணியும் பங்கயப்பொற் றாளானோ. (௬௯)
தானபங்க னென்னுமதன் றன்னாணை யைக்கடந்து
மானபங்கம் பண்ணும் வலியொன் றுடையானோ. (௭௦)
அறியா தொருநா ளறையினும்வன் பாசஞ்
செறியா தருளுந் திருப்பே றுடையானோ. (௭௧)
பூதமுத லெல்லாமும் போக்கியவற் றுண்மறைந்து
ஞாதிருவா மென்னை நயந்தறிவித் திட்டானோ. (௭௨)
எந்தைசிவ சாதனங்கட் கெல்லாந் திருநீறு
முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானோ (௭௩)

உருத்திரனே யையமிலை யோருருத்தி ராக்கந்
தரித்தவ னென்றெமக்குச் சாற்றும் பெருமானே. (எச)

ஒண்மறையின் கண்ணு முருத்திரமவ் வஞ்செழுத்தும்
கண்மணியென் றையமறக் காட்டு மருட்கடலோ. (எரு)

அருவாகி நின்றசச்சி தானந்த வீசன்
குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானே. (எசு)

பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமென வும்பேர் பெறுமிலிங்க மென்றானே. (எஎ)

திரஞ்சரமென் றீசன் றிருவுரு விரண்டிட்
பரஞ்சரமென் றோதும் பவளவா யண்ணலோ. (எஅ)

அங்கம் புனைவோ னடிப்புனலல் லாதுபவப்
பங்கங் கழுவப் படாதென்று சொன்னானே. (எகூ)

அந்தக் கரணத் தழுக்கறுப்ப தெங்கள்பரன்
சந்தப் பிரசாதந் தானென்று சொன்னானே. (அ0)

தருணமதிற் சீறுந் தனிவிழிகாட் டாமற்
கருணை குடியிருக்குங் கண்களொடு வந்தானே. (அக)

ஏருருந் தான்வா ழிடமேநற் காசியுந்தென்
னூருரு மம்பலமு மாக்குசிவ ஞானியோ. (அ௨)

தன்பாத தாமரைதோய் தண்புனலே கங்கையாய்
வன்பாச நீக்க வழங்குசிவ ஞானியோ. (அ௩)

மண்படைத்த நான்முகனூர் மானுடர்த மொண்முகத்திற்
கண்படைத்த பேறுபெறக் காட்டு முருவானே. (அச)

ஆர்க்குங் கொடுநோ யனைத்துங் கடைக்கண்ணாற்
றீர்க்குங் கருணைச் சிவஞான தேசிகனே. (அரு)

செப்ப முறவெனது சிந்தைவீட் டாசையெனுங்
குப்பை துகைத்துக் குடியிருக்க வல்லானே. (அசு)

தன்னையரு ளாளனெனுந் தன்மை யுலகறிய
வென்னையடி யாரோ டெழுந்தருளிக் காத்தானே. (அஎ)

மெய்த்த வறிவாம் விளங்குகதை யொன்றெடுத்துத்
தத்துவமா மட்கலத்தைத் தாக்கும் பெருமானே. (அஅ)
வழுவின்றித் தன்மா வலியுலக மேத்த
மழுவின்றிப் பாவ மரமெறிய வந்தானே. (அகூ)
இணையாது மில்லா விடர்ப்பவவே லைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானே. (கூ0)
ஊனே வுயிரோ வுயிர்க்குயிரோ வானந்தத்
தேனே வமுதோ சிவஞான தேசிகனே. (கூக)
அண்ட முழுது மணுவிற் சிறியவாக்
கொண்ட பெருமைக் குணக்குன் றனையானே. (கூஉ)
எங்கண் மலவிருணீக் கிண்டு மயிலைமிசைச்
செங்கதிர் போற் றோன்றுஞ் சிவஞான தேசிகனே. (கூங)
அற்பகலு மாறு தரனடியார்க் கீதலுறுங்
கற்பகமாய் வந்துதிருக் காஞ்சிநக ருற்றானே. (கூச)
பூணு மருள்வசவன் பூண்டசர பூசையன்று
காணு வெமக்கின்று காட்டுசிவ ஞானியோ. (கூரு)
விருப்புவெறுப் பின்மை விளக்கவென்புன் சொல்லைத்
திருப்பதங்கொள் கின்ற சிவஞான தேசிகனே. (கூசா)
பொறியூடு செல்லுமனப் போர்க்களிற்றைத் தன்னுட்
டறியூடு நிற்பத் தளைந்தசிவ ஞானியோ. (கூஎ)
பாடியுந்தன் சீர்த்தி பரவியுந்தன் பாதமலர்
சூடியுமிக் காலந் தொலைக்கவருள் செய்தானே. (கூஅ)
பொய்ம்மாயை யென்னும் புலியின்வாய்ப் பட்டேனைக்
கைம்மாறி லாமற் கருணைகொடு மீட்டானே. (கூகூ)
பத்தியுந்தன் பங்கயப்பொற் பாதமே பாடுகின்ற
சித்தியுந்தந் தாளுஞ் சிவஞான தேசிகனே. (க00)

சிவஞானதேசிகர் தாலாட்டு முற்றிற்று.

உ

கணபதிதுணை.

பொம்மபுரம்.

# ஸ்ரீ சிவஞானபாலையதேசிகர்

# நெஞ்சுவிடுதூது.

காப்பு. நேரிசைவெண்பா.

கைக்களிற்றை யன்றுரித்த கண்ணுதலோ னீன்றதனி
மெய்க்களிற்றை நெஞ்சமே மேல்கொண்டு - புக்குருக்கி
மேவன்பாற் றூதாகு மேனிச் சிவஞான
தேவன்பாற் றூதாகச் செல்.

---

நீர்கொண்டு தாளாலந் நீரைத்தீஞ் சாறென்று
பேர்கொண்டு வந்தாரப் பெய்கரும்பி - னேர்கொண்ட
பூமுடியா னீர்கொண்டு பொங்கு மருளென்று
நாமுடியால் வீழ்ந்திறைஞ்ச நல்குதரு - காமருதன்
றேசுணர்த்த வேண்டித் திருமுடிமேன் மேவிவாழ்
மாசுணத்தைத் தாளொளித்த மாணிக்க - நேசித்துக்
கொள்ளு மடியார் குழாத்தினைத்தான் வஞ்சித்திங்
கெள்ளும் விடங்கலவா வின்னமுதந் - துள்ளு
௫. மொருமான் மழுவோ டொளித்தெமைமுன் பற்று
மிருமா ளொளிக்கவரு மெம்மான் - பெருமா
னுடுத்திருந்த வாசனையா லோங்குபுலித் தோன்மே
லடுத்திருந்து வாழு மரசு - தடுத்திருந்த

---

காப்பு - தூய்தாகுமேனி என்றும்பாடம்.

(௬) வாசனை என்றது நினைவிற்குக் காரணமாயுள்ள பாவனை வாசனையை என்க. தடுத்திருந்தது ஒன்று-அறிவைத் தடை செய்திருந்ததொரு மலினம்.

தொன்றென் றவித்தை யொழித்திட் டெம்பினைநீ
யன்றென் றொழித்தெனைத்தா னாக்குவா - னன்றென்று
பொன்னை நரர்க்குக் கொடுத்துநீர் போமென்று
தன்னை யெனக்கருளுந் தம்பிரா - னன்னையெனு
முற்றா னமுதமே யொப்பா னருண்மேனி
பெற்றா னடியேன் பிழைபொறுப்பான் - கற்றார்
௧௦. தொடுத்த தொடைக்கிசைந்த தோற்றத்தான் றன்னைக்
கொடுத்த கொடைக்குவந்த கோமா - னடத்தலுறச்
செல்லுமணித் தேர்மீது செய்தமைத்த பாகன்போ
லில்லு ளெமைவைத் தியக்குவா - னல்ல
சுரர்மேன்மை யெங்கீழ்மை தோன்றா தொழிய
நரர்மேனி சாத்திவரு நம்பன் - றனாமேன்
மழுவேறு கையான் வரினுநீ றெள்ளுங்
கழுவே றிகளுந்தாழ் காலான் - புழுவேறு
மென்பயிர்போல் வெய்ய விடயத் தரிப்புண்டு
துன்புறுவேற் குற்ற துணையானா - னென்பினுயி
௧௫. ராக்கினான் போல வடியே னுளத்தன்புண்
டாக்கினான் மாறாத வானந்தந் - தேக்கினா
னாதாந்தன் வீடுதவு ஞானவினோ தன்றெளிந்த
வேதாந்தன் கைம்மாறு வேண்டாதான் - போதாந்தன்
விண்ணோ ரமுதன்ன வேண்டி விடமுண்ட
தண்ணா ரருள்சிறிது தானாக - வெண்ணா
விறப்புக் கடிய விருவினையோ டெங்கள்
பிறப்புக் கடியப் பிறந்தான் - சிறப்பக்
கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல் - பயில

---

(௧௩) கழுவேறிகள் - சமணராதியோர்.
(௧௫) என்பின் உயிராக்கினான் - ஆளுடையபிள்ளையார்.
(௧௭) எண்ணி இறப்பும் பிறப்பும் கடியப்பிறந்தான் என்க

௨0. நரனென் றிருந்தாலு ஞானமிலா தாரும்
பரனென் றறியப் படுவா - னொருநன்றில்
பாவிக் குதாசனர்க்குப் பத்தர்க்குச் சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையா - னுவிக்குத்
தோன்றாத் துணையாகித் தோன்றுந் துணையுமாய்ச்
சான்றார்க் கருளுந் தகைமையான் - மூன்றாற்
பெருக்கு மிருசமயம் பேதித் தறியா
திருக்கு நிலையி னிருப்பா - னரக்கன்
மலையா நிலையாகி மத்தாகி யாழி
யலையாத தாயளப்ப தன்றிச் - சிலையாய்ப்
௨௫. பொறுப்ப திலதாய்ப் பொறையருவி தூங்கி
வறப்பினு நல்கும் வளத்தாய்ச் - சிறப்ப
வணியார் கொடையாகு மைந்தருநற் சிந்தா
மணியார் கருணை மலையான் - கணியா
வறிவாங் குறிஞ்சியினின் றங்கெழுந்து காமச்
செறிவாங் கொடும்பாலை தீர்த்து - மறியாத
மாயையெனு முல்லை வளர்பசுக்கொண் டைவொரு
மாய ருறுதொழிலை யாங்ககற்றிப் - பாய
விடய மெனுங் குளங்கள் வேறுவே றாகா
துடைய வுடைத்திட் டௌமென் - றடையு

---

(௨௧) கருணைபுரிதலாவது - தம்மைநேர்க்குதலாகிய வற்றால் பாவிகட்குப் பாவவொழிவும், தம்புனிதச்செயல்களைநோக்குதலால் உதாசனர்க்குப் புண்ணியவிருப்பமும், தம்மைவழிபடுதலால் பத்தர்க்குநல்வினையும் தம்மை நம்புதலால் சீடர்க்கு முத்தியும் உண்டாக்கல்.

(௨௨) மூன்றாற்பெருக்கும் இருசமயம் - அறுசமயம்.

(௨௪) இது முதல் தசாங்கம் கூறப்படுகின்றன. இது கைலை மந்தரம் விந்தம் மேருவை இழித்தவாறு.

(௨௫) வளத்து - வளத்தது.

மருத நிலநிறைந்து வாள்விழியா னெய்தல்
பெரிதுபெற வந்து பெருகிக் - கருதிலொரு
தானந்த லின்றித் தலம்விசும்பு போர்த்துவரு
மானந்த மென்னுமலி யாற்றினான் - ஞானம்
பயனாக வோர்முப் பகுதியுயிர் வாழ
நயனாகு மும்மாயை நாடன் - வியனாக
விள்ளலரு மன்பர் விடயக் கரவருறு
வுள்ளமெனா நன்கமைந்த வூருடையான் - றெள்ளுதமிழ்ச்
சொல்லா மலரைச் சுவையா மதுவொழுகப்
புல்லா வழுச்சொலெனும் புன்மையெலா - மில்லாமற்
புன்புலவ ராங்குரங்கு போற்றாப் பெருமையுற
வின்புலவ ராஞ்சுரும்பார்த் தீண்டிவர - வன்பெனுமோர்
வீடாத நார்கொண்டு மென்று வெனுங்கரத்தால்
வாடா வகைபுனைபா மாலையான் - பீடார்
மலரா லயனார் மனச்சாலை நின்று
நலநா மணிவாய்த னண்ணி - நிலனாக
வானிடையே யோடி வரையா வழகுடைத்தாய்த்
தானனுமா னிப்பினுயர் தன்மைத்தாய் - ஞான
நிறையா மரபு நிலைவழா தோங்கு
மறையா மரியபரி மாவான் - குறையாத
தத்துவமாஞ் சேனை தனைத்துரந்திட் டாணவமாய்
வைத்த தலையின் வலியறுத்து - மெத்து
வினையாம் பணையொடித்து வீட்டியெழுந் தோடு
மனமாம் பரிமாவை மாய்த்துத் - தனிமாரன்

---

(௩௩) முப்பகுதியுயிர் - விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர். மும்மாயை - சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை.

(௩௪) வரையாமை - எழுதாமை, நீக்காமை. அநுமானித்தல் - காரியத்தைக்கொண்டு காரணத்தைத் துணிதல், குதிரை கனைப்பு.

கன்னன் முரித்துக் கருந்தோலாற் போர்த்திருந்த
துன்னுதிண மென்புதசை சோரிகுட - னென்ன
வளர்ந்தறிவ வெல்லா மழிந்துபுறந் தோன்ற
விளங்கிழையார் தம்மை மிதித்துத் - துளங்கு
சமயமாம் பொய்க்குழியிற் சார்ந்துவிழா தோடி
யமையுமா னந்தநீ ராடிச் - சுமையலா
௪௫. வேதா கமமாம் விளங்குமணி தாங்கிவரு
மாதார மாஞான வானையான் - மாதேவன்
சங்கர னாதியிறை தானுவெனும் பேருடைய
கங்கரனே யாதி கருத்தாவா - மங்கணனை
யேத்தி யடியி னிடந்து விழிக்கமலஞ்
சாத்தி முடிவணங்கிச் சக்கரமொன் - றீத்தருள்செய்
யென்றுபெறு மான்முதலோ ரெல்லாம் பசுவென்று
மன்றமுறக் கட்டுதரு மக்கொடியா - னென்று
மடியா தெழுமொழியா யானந்தமாகி
முடியாத நாத முரசான் - கடியார்மென்
௫0. சந்தமல ரோன்முதலோர் தங்களாற் றோற்றமுத
லைந்தொழிலுஞ் செய்விக்கு மாணையான் - முந்து
தவஞான மில்லாதார் சாற்றினும்வீ டெய்துஞ்
சிவஞான தேவெனும்பேர்ச் செல்வன் - பவநாசன்
முன்னொருநாட் சாதனத்துண் முந்துதிரு வெண்ணீறு
மன்னு முயிரினுறு மாசொழிக்குந் - துன்னு
கலவையுடன் மாசாய்க் கழியுமெனக் கூறிப்
புலவரினம் போற்றப் புனைந்து - பலவணிக
டாங்குமள வன்றித் தரும்பே றிலையென்றுந்
தீங்கி லிதையொருவன் றீண்டுறினு - மோங்கு
௫௫. முருத்திரனே யாவனென வோருருத்தி ராக்கம்
பொருத்த முறவுறுப்பிற் பூண்டு - வருத்துகழை

விற்றோன் மதவேளை வெல்லுமடை யாளமெனக்
கற்றோய் துகின்மருங்கிற் காட்சிதரக் - கற்றோ
ரறியா வறிவாகு மானைமேல் கொண்டு
மறியா மனத்தை மறிப்பா - ருறியாய
தற்றுநிலம் வீழ்ந்ததுபோ லாசையற மெய்ச்சிவத்தி
னுற்றுவச மற்றிருக்கு முண்மையார் - முற்று
மழுக்கா றவாவெகுளி யின்னாச் சொன் னான்கு
மிழுக்கா வறமுடைய ரென்பார் - வழுக்கா
மனைதுறந்தார் மாயை வலிதுறந்தார் பாவ
வினைதுறந்தார் போகம் விளைசிந் - தனைதுறந்தார்
வேண்டுதல் வேண்டாமை யில்லாதார் மெய்யன்பு
பூண்டு சிவனடியே பூசிப்பார் - மீண்டுபவம்
வாராவா றோர்வார் மறையுஞ் சிவாகமமு
மாராய்வா ராரா வனுபூதி - சார்வாவார்
பொன்னுஞ் சிலையும் புகழும் பழியுமே
மன்னுங் குடிலுமணி மாளிகையு - முன்னும்
படிவே றிலாதார் பகைநட் பிலாதார்
முடிவே லரசாய் முயல்வார் - கடிவேது
மில்லா திரப்பா ரிறையை நினைந்தொன் றுஞ்
சொல்லா திருப்பார் துதிசெய்வார் - வெல்லாத
வைம்புலனும் வென்றா ரவற்றைத் தடாதுமனஞ் [மான்
செம்பொருளின் வைத்துச் செயல்செய்வார் - நம்பெரு
மேனியா மஞ்செழுத்தும் வேண்டி யெடுத்துரைப்பார்
மோனிகளாய் வீற்றிருந்து முன்னுவார் - மேனியெலாம்
பூசுவார் வெண்ணீறு புண்டரமே சாத்துவார்
தூசுளார் தூசு துறந்துளா - ராசையினால்

---

(ருகூ) ஙரு - திருக்குறள்.
(சுச) மூன்றுந்தன்மையில் வேறிலாமையாவது - இரண்டையும் சமமாகக்காண்டல்.

வேணி முடிப்பார் விரிப்பா ருலகியலை
நாணிநடப் பாருலகை நாணுதார் - பேணித்
தனதுபத மெத்திறத்துஞ் சாரு மடியா
ரினமருவி யெம்மருங்கு மீண்ட - மனுவுரையாத்
தன்பெயர்கொண் டார்வமொடு சாரும் புலவரிற்கால்
புன்புவியில் வையாப் புலவர்தாம் - வன்பவநோய்
மாற்றுமருந் தென்று வடிவிற் படத்துடையா
தேற்று மகிழுவடி யின்றுகள்போய்ப் - போற்றுமிசை
விண்ணிற் புகவணைய மேவுதனை மாசகன்று
மண்ணிற் புகுமா மதியென்று - நண்ணிப்
பலவியமும் பொங்கிப் பரவையா யார்ப்ப
மலவலியை மாற்றுவான் வந்தான் - ஞாலவின்
முழங்கு மறையின் முடிந்த பொருளை
வழங்கு மருளுடையான் வந்தான் - விழுந்து
பரவு மடியார் பவப்பிணிக்குத் தானே
மருவு மருந்தனையான் வந்தான் - பொருவின்
மணிகண்ட னென்னுமொழி மாற்றியே யக்க
மணிகண்ட னென்னுமவன் வந்தான் - கணிகண்
டெயினர் மணமயர்வுற் றின்ப மருவு
மயிலை மலையுடையான் வந்தான் - றுயர்செய்
பொறிக்குஞ் சரமதனைப் போகாமற் றாளின்
மறிக்குஞ் சிவஞானி வந்தா - னெறிக்குந்
தினகரனா லாரழலாற் றிங்களாற் போகா
மனவிருளை நீக்குவான் வந்தா - னெனமுன்

---

(எ0) மனுவுரை - மந்திரவாக்கியம்; தன், என்றது சிவஞானபாலையதேசிகரை. புலவர் - தேவர், கவிஞர்.

(எஉ) மகிழ, எங அணைய எனஇயையும்.

(எங) தனைமேவு மாசு எனமாற்றுக.

(எச) பொறிக்குஞ்சரம் - இந்திரியங்களாகிய யானை.

பரிச்சின்ன ஞானம் பரியநரர் காதிற்
றிருச்சின்ன வாரமுதந் தேக்க - விரித்துக்
கவிராயர் போற்றக் கவரிபல முத்திப்
புவிராய வொன்றிரட்டிப் போதத் - தவிராமன்
ஞாலவட்டந் தாங்குமொரு நாகத்தின் குட்டியென
வாலவட்டம் பாங்க ரசைந்துவரச் - சாலவட்ட
மாமதியாய் நன்கு வளர்ந்து துறந்தபிறை [போல்
காமருதன் வாழிடத்தைக் காண்பதற்குச் - சேர்முறை
அ௫. வெள்ளை மணிக்கவிகை மேனிழற்ற வான்மழைபோற்
கொள்ளைமல ரன்பர் குழாம்பொழியக் - கிள்ளை
மொழியார் மயறுரந்து முத்திபதத் தென்று
மழியாத வின்ப மருள்வாய் - பழியா
நடையா யுலகிறந்த ஞானே தயாவெம்
முடையாய் புலன்கொ ளுணர்வாம் - படையா
யணியே யமுதமே யாவியே சிந்தா
மணியே கருணை மலையே - பணியேறு
கோலங் கரந்துவந்த கோதிலாத் தேறலே
ஞாலம் புகுஞான ஞாயிறே - சீலங்கொள்
கூ0. காவேயென் செல்வமே கண்ணே சிவஞானத்
தேவே யெனவுந் தியர்துதிப்பப் - பூவேறு
கோனும் புரந்தரனுங் கொண்ட னிறத்தானும்
வானும் புகழ்பவனி வந்தருள - ஞானம்
பருவ வகையாற் பலப்பதப் பட்டார்
தெருவின் மனமகிழ்ந்து சென்று - ருருவி
னொருதா னணிய வுரியனவா மென்னும்
பெரிதா மழுவும் பிறவுந் - தெரியாம
னீத்துப் பொதுவாகு நீறுதிரு மேனிகொடு
சாத்திப் பெருமைபெறுஞ் சங்கரனை - மூத்துத்

(அஉ) கவரி இரட்டி என இயையும்.

திருந்து நதிமுழுதுஞ் சென்றாடி ஞான
மருந்து முணவுசரு காக்கி - வருந்துநினு
நீங்காத மும்மலமு நீக்கவருண் மேனிகொடு
நாங்காண வந்தருளு நாயகனை - யோங்கார
நாத முறுபொருளாய் நாதாந்த நாடகனாய்
வேத முடிமணியாம் வித்தகனைச் - சாத
மருளு சகனை மயிலைமலைத் தேனைக்
கருணு லயனையெதிர் கண்டார் - சரணா
விந்தந் தொழுவார் விழுவா ரிதுமெய்க்கு
முந்து தவத்தின் முதிர்வென்பா - ருந்தன்பி
னுள்ளந்தா ணின்றுச்சி காறுமுள மாயுருகி
வெள்ளம்பாய் கண்ணராய் மெய்விதிர்ப்பார்-கொள்ளுங்
கலமென் றுகிலுதவிக் காவென்டா ரேனைப்
பலவும் பெறுமோர் பரிவிங் - கிலமடியே
மெம்மை யெமக்கருளா யென்பா ரிறையவனே
யிம்மை நினையணையோ மென்றாலு - மம்மையினில்
யானென்று நீயென் றிரண்டில்லை யென்னுமுறை
தானின் றனையணைவோஞ் சார்ந்தென்பா - ருனின்று
வாழ்ந்த தமையுமினி மாய்ந்தாலு நன்றென்பார்
வீழ்ந்துமொழி யொன்றுபெற வேண்டுவார் - சூழ்ந்த
திசையெலா நின்மெய்த் திகழ்வென்பா ரொன்சொற்
கிசையலா மோவரசே யென்பார் - நசையினால்
யாம்புணர்ந் தின்ப மிவராற் பெறுவதலாற்
றாம்புணர்ந் தின்புறூர் தாமென்பார் - நாம்புணர்ந்தா
னீங்குவது முண்டா நினையா திருந்தபடி
யாங்குறுவ தேதல் லறிவென்பார் - நாங்கள்

---

(கூஎ) சாதமருள்-பிறவிக்குக்காரணமான விபரீதவுணர்வு.
(௪0உ) எம்மையெமக்கருளாய் என்றது ஆத்மநிலையை விளக்கலை என்றபடி.

கரவி லிவர்வடிவங் கண்டநாட் டொட்டிங்
கிரவு பகலில்லை யென்பா - ரரிதிற்
பிறந்தபயன் மன்மதனாற் பேதுற்று வாளா
லிறந்து படுவதோ வென்பார் - சிறந்த
கக0. சிலையோநின் னுள்ளஞ் சிவஞான தேவே
யிலையோ கருணைதா னென்பார் - மலையோடு
மற்பொருதல் போல வலிந்துவரு கென்பார்நீ
யெற்புணர்வ தென்னென் றிரங்குவார் - பொற்ப
வறவனே நின்னை யலதெண்ணேம் வானத்
திறைவனே வந்தாலு மென்பார் - துறவனே
மேவிலெமை நின்னை விகாரி யெனவுரைப்பார்
யாவருல கெங்கு மிலையென்பார் - பூவி
லிவரெலும்புந் தோலுமா யெய்தினா ராயி
னெவர்விரும்பி வேண்டுவா ரென்பா - ரவர்நெருங்கி
ககரு. யெய்த வுடன்வணங்கி யிவ்வா றடியேனுஞ்
செய்த தவங்கள் செலுத்தப்போ - யையன்
றெழும்பு மறந்தொழியாத் தொல்விசயன் வில்லின்
றழும்பு மறைந்த தலையு - மெழுந்துமதன்
வின்னியா சஞ்செய்முன் வென்றுபகை யின்மையாற்
சன்னியா சஞ்செய்படைத் தண்ணுதலு - மன்னிவாழ்
கேவலமென் கங்குல் கெடுக்குந் தொழிலொன்றின்
மேவலுற வொத்த விழியிரண்டு - மாவலொடு
நல்லவியல் கேளா நணுகுமிசை பாடுநரைச்
செல்ல விடுத்த திருச்செவியும் - வல்ல

---

(ககச) இக்கண்ணி சிவக்கோலத்தைச் சுட்டிநின்றது.

(ககஎ) வில் நியாஸம் - வில்லைத்தொடுதல். பின் பகையின்மையின் நெற்றிக்கண்ணைத் துறந்தனரென்பது.

(ககஅ) கேவலம் - அறிவின்மறைப்பு.

௧௨௰. வியற்பகையை முன்ன மிரந்த மொழியை
யயர்த்த மலர்வா யழகும் - வியப்புறவவ்
வாலமுண்ட தென்ப தறையாம லிவ்வுலகம்
பாலருந்து மென்னப் படுமிடறு - மேலுவந்து
நாமங்கை போற்றவுள நாணுந் தலைமாலை
போமங் கலமாம் புயமலையுஞ் - சேமங்கொ
ளேனமருப் பில்லா திருப்பதுவு மோரழகென்
றூன மறத்திகழு மொண்மார்பும் - வானம்
வழுத்தம் புயமா மனையான் றலைக்குக்
கழுத்தென்ப தில்லாக் கரமு - மெழுத்தென்று
௧௨௫. கொள்ளுங்கொடுவரித்தோல் கொள்ளாதுநூல்வலியைக்
கொள்ளுந் துகிலுடுத்துக் கொண்மருங்கு-முள்ளுமும்பர்
மன்னு முடிவெருவி வந்துழியிம் மன்பதைதஞ்
சென்னி படச்சிவக்குஞ் சித்தடியு - மென்னுடைய
கண்களிப்பக் கண்டுமிகக் காதலா னேனிந்த
மண்களிக்க வந்தசுவை வானமுதம் - டெண்களுக்கு
மாலா ரணனமரர் மாதவரிம் மானுடர்போற்
றோலாத வீரமுடைத் தோற்றத்தான் - மேலாய
செங்கையமு தன்னான் சிவஞான தேசிகனெம்
பங்கமல மாயைப் பகையானான் - றங்கணைல
௧௩௰. னூண்டுறந்து சீர்சா லுடைதுறந்து செம்மணிப்பொற்
பூண்டுறந்து கண்கள் புனல்சொரிய - வாண்டடைந்து
நையு மவர்நிற்க நாயேன்பாற் பொங்குமருள்
செய்து திருக்கடைக்கண் சேர்த்தினான் - னையனைநா
னன்று தொடங்கி யணைவான் விருப்புற்றே
னென்றுணை நீ யன்றி யிலைநெஞ்சே - நன்றிபுரி

(க௨௪) இவர்கரம் பிரமகபாலத்தைக் கழுத்துட்போற்று ங்காமை குறிப்பித்தது.

(க௧௫) அடியேனும் க௨௭-காதலானேன் என இயையும்.

வேதா கமங்கள் விதிக்கும் விதியனைத்து
நீதான் புனிதமுற நேர்ந்தன்றோ - வாதார
யோக மிருநான்கு முன்னைவய மாக்குவதற்
காக முயலுவனை வல்லவோ - போகமுறு
தன்மைக்குஞ் செய்யுந் தவத்திற்குங் கற்றறியு
நன்மைக்குங் கொள்ளுமொரு நட்பிற்கும் - வன்மைக்கு
மீகைக்குந் தன்னை யிருந்தாங் குணர்ந்தடையு
மோகைக்கு நீயே யுறுதுணைகாண் - போகத்தி
னின்றோரை மெய்த்துறவி னிற்பிப்பா யத்துறவிற்
சென்றோரை யில்லிற் செறிப்பிப்பாய் - குன்றா
வறத்தை மறமாக்க வம்புவியின் மிக்க
மறத்தை யறமாக்க வல்லாய் - நிறுத்தி
யொடுக்குதலே முத்தி யுனைவிடயத் தோட
விடுக்குதலே பந்தமென மிக்கா - யடைக்குதலா
னின்றேயே யாகிலொரு நீதான் புலன்பரந்து
சென்றாலு மெய்துவதோர் தீதுண்டோ - பொன்றாத
முத்தி யொருகணத்தின் முன்வருநீ வேண்டுவையே
லித்தனையு நின்னா லிசைந்தனகாண் - சத்தியமா
யேதேனு மேனி யெனக்கொண்டு வந்தருள
மாதே வனைநீ வருவிப்பாய் - தூதேவு
நம்பிகர வுண்டவொரு நற்பனவப் பிள்ளைதனை
யம்புவியின் மீள வழைத்ததூஉ - மெம்பெரிய
நாவிற் கரசு நடுக்கடலுட் கற்பெருந்தூண்
மேவிப் புணையா மிதந்ததூஉம் - பாவிற்கு
வல்ல வொருபுலவர் வல்லெலன்பு பெண்ணாகச்
செல்ல மயிலையிடைச் செய்ததூஉந் - தில்லையினில்
வாளா நெடுங்கண் மடவாரலை நீலகண்டர்
சூளான் மனையுட் டுறந்ததூஉந் - தோளாத
முத்தனைய நன்மாதை முன்ன மியற்பகையார்
வித்தகனை நல்கி விடுத்ததூஉம் - புத்திரனைத்

தொண்ட ரறுத்தமலன் றொண்டர்போல் வந்திரப்பப்
பண்டு சமைத்துப் படைத்ததூஉ - மண்டிருளின்
முக்கணனார் செல்ல முளைவார மாறனா
ரக்கணமே செய்க்க ணடைந்ததூஉம் - புக்கரனார்
வேண்ட வரிந்துமகள் மென்கூந்தல் கஞ்சாற
ராண்டு வணங்கி யளித்ததூஉ - மூண்டமரி
னேற்றானை யீசனென வேனாதி நாதனார்
நீற்றா னினைந்துருகி நின்றதூஉ - மாற்றானைக்
குத்தினா னென்று குறியாமன் மெய்ப்பொருளார்
தத்தனே காக்கவெனச் சாற்றியதூஉ - மத்தவிபஞ்
சிந்த மலரைச் சிவகாமி யாண்டார்க்காய்
முந்தியெறி பத்தர் முனிந்ததூஉஞ் - சுந்தரனைத்
தொண்டத் தொகைபெறாத் தொல்லுலக முய்யவிறன்
மிண்டத் தொழும்பர் வெகுண்டதூஉ - மண்டபத்து
நீலநக்கர் பாணருக்கு நேசித்து நல்யாக
சாலை யிடத்தைமுனந் தந்ததூஉ - மாலயற்கு
மெட்டாற்கு வேண்டி யிருங்கலயர் குங்குலிய
முட்டாமற் கொள்ள முயன்றதூஉம் - வட்டாடி
யாக்கு பொருளை யரனடியார்க் கன்பினால்
மூர்க்க ருதவி முடித்ததூஉந் - தூக்குதலை
மீது பரனொளித்த வெண்கோ வணத்திற்காப்
போதவமர் நீதியார் புக்கதூஉ - மாதியுமை
பாக னடியவரைப் பண்டைநிலை யுன்னியதக்
தோகைகரங் கம்பர் துணித்ததூஉஞ் - சோகமறக்
கண்ணப்பர் மென்றசையைக் காளத்தி யார்தம்மை
யுண்ணப்ப வென்றுமுன மூட்டியதூஉம்-வண்ணப்பொன்

(கருச) தொகைபெறா-செய்யா என்னும்வாய்பாட்டது.
(கருகூ) கம்பர் - கலிக்கம்பர்.

மீனை யளக்கரிடை மிக்க வதிபத்தர்
மேனைமரு கற்சென்று விட்டதூஉம் - யானைமிசை
வந்தமலை நாட்டரசர் வண்ணனைத் தொண்டரெனப்
பந்தமறு மன்பாற் பணிந்ததூஉங் - கந்தைபரற்
கன்பி னுதவிலனென் றக்குறிப்புத் தொண்டர்தா
மூன்புசிலையோடுதலை மோதியதூஉ-மன்புறுமோர் [யைக்
தாட்புலியார்போற்று திருத்தாண்டவனைற்கொள்கிளை
கோட்புலியார்கேசமறக்கொன்றதூஉங்-கேட்பிலிவை
கக௬. யெல்லாமு நின்ற னிசைவாற் புரிந்தனநீ
யல்லா தியற்றலற மன்றுகாண் - சொல்லாட
நின்பெருமை யாறறிவார் நீயென் னுடுகூடி
லென்பெருமை சொல்வாரு மில்லைகாண் - வன்புவியி
னின்னைத் துணையல்லை நீயென்று நீங்கினாற்
பின்னைத் துணையாகும் பேரில்லை - யுன்னைத்
துணையாக் கொளற்குத் துணை நீ நினக்கிங்
கிணையாய்ப் பிறிதொன் றிலைகாண் - புணையாய்ப்
பிறப்புக் கடற்குப் பிடிக்கப் படுவாய்
மறப்புற் றதினழுந்த வல்லாய் - சிறப்பு
கஎ0. விலங்கி னரர்தமக்கு மேவியது நின்னு
லிலங்கு முனிவரர்கட் கெல்லா - நலங்கொள்
பெருமை நினைத்துணைக்கொள் பெற்றியா லன்றோ
வுரிமைநீ யன்றிவே றுண்டோ - வருமையென்ப
தில்லையுனக் கெவ்விடத்து மென்மனமே யாதலினு
னல்ல பெரியசிவ ஞானிபாற் - செல்லவுனை
வேண்டுறுவேன் றாதாக வேதக்கிளியைவிடிற்
காண்ட லரிததனாற் கண்டாலு - மாண்டதுதா
னொன்றுக வோதா துரைக்கும் பலமயங்கச்
சென்றாலு நீயேதான் செல்லாம - னின்றாலு

(கக௭) நீ துணையல்லவென்று நின்னை நீங்கினால் என்க.

௧௭௫. நீயே பிறிதில்லை நெஞ்சமே யெற்பயந்த
தாயே யவனிடங்கள் சாற்றக்கேள் - பேயே
னெழுநகரி னுட்சிறந்த தென்பதலாற் சீர்மை
முழுது மியம்ப முடியா - தழகுறுவேற்
கந்தனுயர் கச்சிவளங் காற்கூ றளவுறைப்ப
னைந்துகரன் சொல்வ னரைக்கூறு - நந்தமரன்
கூறுடையா ளோர்முக்காற் கூறுரைப்பண் முற்றுமிள
வேறுடையான் சொல்வ னெனவனந்தன் - வீறுடைய
நாவா யிரங்கொண்டு நானுரைத்தல் காற்கீழென்
றோவாத நாணுகி யோடியே - தாவாத
௧௮0. வேலையிடை வீழவவன் மேல்வீழ்ந்து துஞ்சினன்
போல வரிகிடப்பப் பொங்குபுகழ் - ஞாலமெலா
நண்ணவொரு காசி நடுமெய்ஞ் ஞகரமுறு
மெண்ண வரிய வெழினகரு - மண்ணுலகின்
முன்னோர் தொடைப்பொருளை முற்றுங் கரந்துரைத்துட்
பின்னோ ரமதென்னும் பெற்றிபோ - லன்னோபின்
வந்திளைய காசி மரிப்பார்க்கு முத்திபதந்
தந்திடுவ னென்றுமிகு தன்செயலை - முந்துகொடு
சென்றுபர தேயத்திற் சேர்ந்திருப்பச் சீர்மலிந்து
மன்றன் மலரு மணியணியுந் - துன்றுநறுங்
௧௮௫. குங்குமமுஞ் சந்தனமுங் கோலம் பெறப்புனையா
வங்குருகு மேகலையு மாங்கொலிப்பத் - துங்கமுறு
நன்பதியைச் சேரவரு நங்கைபோற் சென்றுமலி
தன்பதியைச் சார்ந்தணைந்த தண்கங்கை-யென்பதுதான்
புத்தா றெனத்தான் புராதனவா றென்னுமணி
முத்தா றுடுத்த முதுகிரியுஞ் - செய்த்தாம

---

(௧௮௪) சீர்மலிந்து ௧௮௭-என்னும் என இயையும்.
(௧௮௬) தன் என்றது மணிமுத்தா நதியை.
(௧௮௭) செய்த்தாமம் - வயலிடம்.

மன்னமாய் முற்றும் விளைய வளங்களெலாந்
துன்னுநாட் டிற்குச் சுவைவிளைய - மன்னுவேண்
மீதண்ட ரோடமர்ப்ப வெங்கணையும் வின்ஞாணுங்
கோதண்ட மும்பொருந்திக் கொண்டேக - வேதண்ட
மொப்ப வுயர்த்தவுய ருப்புக் குவான்மீது
வெப்ப மறுமதிய மெய்யுரிஞ்சத் - துப்புறுபுள்
ளெண்ணிலா வுண்ணா தொழிந்துமட வார்முறுவல்
வெண்ணிலா வுண்டு மிகவளரக் கண்ணெலாம்
பூப்பட் டிருந்தாலும் பூம்பொய்கை நன்காய்ந்து
பாப்பட்ட சேடன் பணங்காட்ட - வாய்ப்புற்ற
கங்கையுடன் வந்தானூர் கண்டுவரு வீரென்று
தங்குறுதன் மக்க டமைவிடுப்பத் - துங்கமுறு
முத்தீ வளப்பமறை முன்னோர் விருந்தினுத
ரத்தீ யவிப்ப வவர்மாதர் - கொத்தின்
கொடியனையார் கொம்மைமுலைக் குன்றே வருத்தத்
துடியிடையே நின்று துவள - நெடிய
கலவ மயிலிவருங் கந்தவே டேரோ
யுலவ நிலைபெயர்வுற் றோடப் - புலவ
ரிரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்றென் - றுரைப்பாவில்
வைதலை யஞ்சி வளத்தா ரிரப்பவர்தா
மெய்தலை நோக்கி யிருந்துதவப் - பொய்தவிர
வில்லென் பதுமொருவ ரீயென் பதும்வினையாஞ்
சொல்லென்ப தின்றுபெயர்ச் சொல்லாக - நல்லவள

---

(௧௮௮) சுவை - உப்பு.

(௧௮௯) ஏறுதற்கு எளியவழியாகவுயர்த்த உப்புக்குவியல்என்க.

(௧௯௨) பூ - சிலேஷை. சேடன்பணங்காட்டல்-பாதலங் காறும் பதிந்திருத்தல்.

(௧௯௩) வேளாளரும் கங்காபுத்திரராகலின் முருகக்கடவுளை சகோதரரென்றார். கங்கை விடுப்ப என இயையும். ஆண்டு வேளாளரின் மிகுதிகுறித்தவாறு.

(௧௯௭) (௧௫௯௮) திருக்குறள்.

மிக்கெலா நாளும் விழவரு வீதியணி
திக்கெலா மேத்தமலி சேயூரு - முக்கணனார்
மந்திர மொன்று யிரமாய் வளர்ந்துபயன்
தந்திடு மொண்மயிலைத் தண்மலையும் - பந்தமறு
தன்னை மருவினரைத் தானாக்குந் தன்மையுடை
மன்னுசிவ ஞானி மருவிவாழ் - நன்னிலையா
லம்ம பிரமபுர மாகும் பொருள்படவே
பொம்மபுர மென்னும் புகழ்ப்பதியு - மெம்மிறைவன்
வீற்றிருந்து வாழிடங்கண் மேவியிவற் றொன்றினுறுந்
தேற்ற முணர்ந்துநீ செல்லுங்கா - லாற்றலுட
னில்லை யிறைவனாற் பூதமலா லிங்கென்று
சொல்லி யுனைமறித்துச் சூழ்ந்ததா - னல்ல
வலகா யுதமெறித லாயுரைப்ப னந்த
வுலகா யதனுரைகேட் டோடேல் - பலகாலு
நாணேது மின்றிக் கருமமலா னிறையைக்
காணே னெனுங்கரும காண்டியொடு - பூணே
னினையணு வாக்கு நியாய னுரையைத்
தினையள வாயினுநீ தேறேல் - பினைவருவை
சேடியனை நெஞ்சமே சேரவவன் றம்பியென
நாடி. யொருசிறிது நண்ணுறேல் - கூடியொரு
புத்திகண பங்கமெனப் புத்திகெட்ட புத்தனுரை
மெய்த்ததென நின்று விடாதிநீ - முத்திபெறு
தன்னை யணுவாக்கித் தாழ்பஞ்ச ராத்திரிதா
னென்ன சொலினு மிசைந்துறே - னின்னைக்
கெடுப்பதே யெண்ணிக் கெடும்யோ கிகளை
விடுப்பதே நன்றென்று மேவே - லடுப்பதெனுக்
கள்ளைக் குடித்துக் களிக்கின்ற வாமிமொழி
கொள்ளத் தகுவதெனக் கொண்டுறேன் - மெள்ளப்
பகுதி விகுதி பகுத்தறியின் முத்தி
தகுதியெனுஞ் சாங்கியனைச் சாரேன் - மிகுதிபெறு

---

(உ00) சேயூர் - முருகக்கடவுள் தலம்.
(உ0ரு) இறைவன் + நாற்பூதம்.
(உ0கூ) அவன் என்றது நியாயனை. சேர நண்ணுறேல் என இயையும்.

உகரு. நஞ்சமார் கண்டனொடு நாரணனை யொப்பாக்கும்
பஞ்சமா பாதகரைப் பாராம - லஞ்சிநீ
சென்று திருமடத்தைச் சேர்ந்துகழு நீர்த்தடமாய்
நின்று நறியகழு நீர்பூப்பத் - தன்று
முகிலா யடைந்துபுகை மூன்றுலகுங் காக்க
நிகமா கமம்விதித்த நீதி - யிகலாத
கோடிமறை யோர்நிறையக் கொள்ளுமுணா வின்பயனை
நாடியிடும் பிச்சையா னல்குமொரு - கோடிசிவ
யோகிகட்குப் போனமுவந்து சமைப்பாரைப்
போகிகட்குப் புற்றனையபொற்சடைமேன்-மோகிகட்குப்
உஉ0. பூசனைக்கு வேண்டும் பொருளுதவு கின்றாரை
வாசமலர் கொய்து வருவாரைப் - பூசனைசெய்
கின்றாரை ஞானநூல் கேட்பாரை நைந்தோதா
நின்றாரை மேனியெலா நீறணிந்து - குன்றாத
கண்டிபுனைந்து கமலா தனத்திருந்து
கொண்டு சிவனைக் குறிப்பாரைக் - கண்டுருகிப்
போற்றிவணங் காவுட் புகுந்து புரமெரித்த
சீற்ற மறந்ததெய்வ சிங்கத்தை - மாற்றலருஞ்
சீமானை யென்றுந் தெவிட்டாத தெள்ளமுதைக்
கோமானை ஞானக் குணக்குன்றை - பூமாரன்
உஉரு. வண்டு படாத மலரைநாஞ் செய்தவத்தாற்
கண்டுகொளுந் தண்ணறும்பூங் கற்பகத்தை - மண்டலமு
மேனைப் புவனங்க ளெல்லாமும் வேண்டுபசுந்
தேனைச் சிவஞான தேசிகனை - நீநெக்
குருகியெதிர் கண்டுகொண்டே யோடிப் பெருமான்
திருவடியில் வீழ்ந்தன்பு தேங்கிப் - பருகமுதே
வேண்டுவார் வேண்டுவன வேண்டியவா றேயுதவு
மாண்டகையே யெங்க ளரசனே - நீண்டவொரு
தந்திதரு பச்சைபுனை தன்மையா னீண்டுபச்சைக்
கந்த மரபிலுறுங் காரணனே - பந்தமற

---

(உஉசு) தந்திதருபச்சை யானையாற்கொணர்ந்த மரகதப் பச்சைக்கடகம். இச்சரிதம் சிவப்பிரகாசசுவாமிகள் வரலாற்றால் உணர்க.

வாளாய வன்பர்க் கமரா பதம்போல
மீளாத வீடுதவும் வித்தகனே - வேளாணை
தள்ளு மடியார் தமக்குத் துணையாகக்
கொள்ளு மிருமலர்த்தாட் குஞ்சரமே - விள்ளலறப்
பத்திக் கடலுட் படிந்த வடியார்க்குத்
தித்திக்குங் கோதிலாத் தேறலே - முத்திக்குச்
சாதியா லன்றுரிமை சாதனத்தா லென்றுண்மை
போதியா நல்குமொரு பொன்மலையே - நீதியால்
வீடும் பொருளும் வெறுத்துமுத்தி வேண்டுவார்
தேடுஞ் சிவஞான தேசிகனே - பாடும்
பொருளே யெனவணங்கிப் போற்றிநின்று நின்பே
ரருளே துணைவே றறியேன் - றெருளே
னினது திருப்பவனி நேர்ந்தநாட் டொட்டுக்
கனலின் மெழுகாய்க் கரையும் - புனல்பெருகு
கண்ணொடு நின்றேங்குங் கங்குல் பகலின்றி
யுண்ண வுடுக்க வுவப்பொழியும் - பண்ணொடு
பாடு நினைமெய் பதைக்கு நினையெங்குந்
தேடு முருகுந் திகைத்தலறும் - வாடுமெனைப்
பாரானோ வென்னும் பரம சிவஞானி
வாரானோ வென்னும் வழிபார்க்கு - மோரானோ
வென்னோ யெனப்புலம்பு மென்னைநின்பாற் றூதாக
வன்னோ பலசெய் தனுரொய்துந் - தன்னோ
ருடம்பும் பொறையா யொழிப்பக் கருதுங்
குடும்பம் பகையாகக் கொள்ளு - மடங்க
வொருபூ தருமில்லா துற்ற விடத்தே
வருபூ ரணமா மருவி - யொருபோதும்
வேறிலா தொப்ப விரும்புறுமவ் வென்னுயிரை
மாறிலா ஞான மணிவிளக்கே - யீறிலாச்
செல்வமே யெங்கள் சிவஞான தேவனே
கல்விகொடு காணாத காட்சியே - புல்லுவாய்

---

(உ௪உ) ஒருபூதருமில்லா துற்ற—ஒருயிரும் காட்சியிற்படா
தொடங்கியுள்ள.

உசரு. புல்லு மளவு மூனவிட்டுப் போவதுநா
னில்லை யிறைவனே யென்றுநீ - தொல்லை
விடய நினைந்தகன்று மீளாம னில்லா
துடைய மலவிருளை யோட்டுஞ் - சடமா
மரமு நிழலும்போன் மாழையும்பூ ணும்போ
லிருமை யபேதமென்ப தென்றும் - பரமுயிர்கள்
வேறென்றும் வேறல்ல வென்றும் விளம்புதலால்
வீறொன்று தாதான் மியமென்று - மாறின்று
சாமி யடிமையெனுஞ் சம்பந்த மென்றுமுளம்
வேமிகலை யோர்மொழியில் வீப்பானைத் - தோமி
உருo. லுலகிற் கிறைவ னுபாதான மென்று
மிலகுற்ற நன்னிமித்த மென்று - நிலவுற்ற
வாவி யணுவென்று மன்று நிறைவென்று
மேவிய மாயைதான் மித்தையென்று - மோவிலது
நித்திய மென்று நிகழ்த்தி மயங்கும்போ
ரத்தனையுந் தீர்த்த வருளானைப் - பத்தரிடை
யுள்ள படி தோற்று முண்மை யுடையானைத்
தெள்ளுஞ் சிவஞான தேசிகனை - விள்ளலறப்
பற்றி யடியேன் படுமிப் பெருந்துயர
முற்று மறிந்துசெல முன்னுநீ - யெற்றுதிரை
உருரு. வேலையுல கெல்லாம் வியக்குஞ் சிவஞானி
மாலைமன மேவாங்கி வா.

## நேரிசைவெண்பா.

என்னே டிருக்கு மெனினுஞ் சிவஞானி
யன்னே நினைவிடுத்தா லன்றியே - தன்னேனை
வஞ்சமே செய்குவனுன் மற்றவன்பாற் றூதாக
நெஞ்சமே செல்லினைந்து நீ.

நெஞ்சுவிடுதூது முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

# ஸ்ரீ சிவஞானபாலையதேசிகர்

# திருப்பள்ளியெழுச்சி

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிறைந்தவொரு சச்சிதா னந்தபர சிவத்தி
னிகழுமுயி ரிப்பியிடை வெள்ளிபோற் றோன்றி
யறிந்துமய லகன்றிடிலொன் றன்றிவே றிலையென்
றறைவர்சிலர் பதியினைப்போ லாருயிர்நித் தியமே
யிறந்துமல சத்திவிடிற் சிவசமா னதையா
யிருக்குமென வறைவர்சில ரோதுவழக்கென் றடியேஞ்
செறிந்தனநின் றனைவினவ வெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (க)

சகலனெனும் பசுக்களைமூ லாதார மென்னுந்
தக்கதொழு விடைமலமாந் தாம்பினா லார்த்துப்
புகலுமொரு நுகர்வுமிலா துணாநிறுத்திப் பின்னர்
பொருந்துகலை யாங்கரத்தாற் கட்டவிழ்த்து விட்டே
யகலுமன வெனும்புரத்தி லோட்டியே விடய
மாகியபுன் மேய்த்தெமக்கிங் கமுதமருள் பவனே
திகழுமலை மகணகரின் மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (உ)

காற்றுமறைப் பாயபடப் பாயலிடை மடங்கற்
கனலருகி னரிசனப்பொற் றூசுமிசை போர்த்துக்
கோற்றொடிமென் முலைமடந்தை தனைமார்போ டணைத்துக்
குளிர்க்குடையா னுததியிடைக் கண்டுயில்வோ னெழுந்து
போற்றினை தெதிர்குறிப்பச் சங்கொடும்வந் தாற்றான்
புண்டரிகன் கரகநீர் கொண்டுதவ நின்றான்
சீற்றமறுந் தவக்களிறே யெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (௩)

தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையா லெறிந்த
தொண்டனிலை விசயனும்வில் லோடும்வந்தா னில்லை
யேதமறு மியற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தா
ரில்லைநினை மண்சுமவென் றொருபிரம்பா லடித்தோன்
போதிலனின் றிருவடியிற் போதுகடேய்ப் பரவிப்
போற்றலுறு மடியவரோ பொருந்தினரொம் மருங்குஞ்
சீதமதி தறந்தமுடி மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (௪)

திருப்பள்ளியெழுச்சி முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

# சிவஞானபாலையதேசிகர்

# பிள்ளைத்தமிழ்.

## காப்பு.

அத்திமுகத் துத்தமனை
நித்தநினை சித்தமே.

## காப்புப்பருவம்.

### திருமால்.

திருமா மறையு மாகமமுந் தெருட்டு பொருளோர் முடிவாகத், தெளிவில் சமயர் தமின் முரணித் தியங்கி யபேதம் பேதமென,—வருமால் வாத மயலொழிய மலர்வாய் மலரப் பெருங்கருணை, வடிவாய் வந்த சிவஞான வள்ள லிணைத் தாண் மலர்க்காக்க,—கருமா முடக்கொம் பொழுகமுதக் கதிர் வெண் டிங்கட் கண்ணிபுனை, காலத் தவன்சே வடியிற்செங் கமல விழியொன் றிடந்தணிந்தும்,— பொருமா மழவெள் விடையாகிப் பொறுத்துந் தொழும்பு தலைநின்ற, பொன்னந் திருமார் புடைக்கமஞ்சூற் புயல்வண் ணத்தெம் பெருமாளே.()

### மல்லிகார்ச்சுனேசுரர்.

உடற்கு விளையுஞ் சூர்தாக்கு மொழித்தற் கரிய பலபிணியு, முடற்று பசிநோய் முதலனவு முணர்வைப் பிணித்துப் பிறப்பெனுமாழ்,—கடற்கு ளழுத்தி யுயிர்சிவத்திற் கலப்பைப் பிரித்து விடுமலமுங், கழலக் கருணை புரிந்தெம்மைக் காக்குஞ்

சிவஞா னியைக்காக்க,— முடக்கு மடிக ணிமிர்த்தெழுந்து முள்காந் திருந்து களஞ்சுருக்கி, முழைவாய் பிளந்து செவி நிமிர்த்து முறுக்கி வெடிவால் சிறிதடித்து,—விடக்கு விரும்பு புலிபாய விளையு முண்மா னுடைமதியம், வெருவுற் றகலும் பருப்பதமாம் விலங்கன் முக்கட் பெருமானே. (௨)

## உமாதேவியார்.

இளைக்கு மருங்கு லொருமடந்தைக் கெய்து தவள முகிற் கூந்த, விருஞ்சூன் முகிலி னிருள்படைப்ப விருண்ட வடியே னுளம்விளர்ப்பத்,—திளைக்கு மலர்க்கட் கருணைமடை திறக்குங் குணப்பொற் குன்றையுயர், சிகர மயிலைச் சிவஞான தேவன் றனைநா டொறுங்காக்க,— விளைக்குந் தவத்தாற் பாறனக்கு விரும்பிக் கொடுத்த கொழுநன்மணி, மிடறே போல வெனது புன்சொல் விடமுண் கின்ற திருச்செவியை,— முளைக்குந் தரள நகைவாயான் முதிர்தீஞ் செய்யு ளமுதூட்ட, முன்னம் பிள்ளைப் பெருமானை முலைப்பா லூட்டு மொருதாயே. (௩)

## விநாயகக்கடவுள்.

நீர்வாழ் வரிச்செங் கயல்கவர நிற்குஞ் சிரல்வா ரிதிக லங்க, நிலைபேர்ந் துலவுந் திமிங்கிலப்பேர் நெடுமீன் கவர்வா னிற்பதெனப்,—பார்வாழ் மக்கட் பரப்பெல்லாம் பணிவேந் தா யின் மொழிப்படுசீர், பாடத் தொடங்கு மெனதிடத்தும் பழி ப்பில் சிவஞா னியைக்காக்க,—தார்வாழ் திருப்பொற் கோயிற் குத் தடமா மதிலிற் பொலிமார்பத், தனிவான் முகிலுஞ் சரோருகப்பொற் றவிசிற் பசும்பொற் குவடும்வா,— னூர்வா ழரசு முனிவரரு மொருதஞ் செயற்குக் காப்பாக, வுவந்து முதற்கட் பரவுபுக ழொருத்தன் முகத்தெம் பெருமானே. (௪)

## சுப்பிரமணியக்கடவுள்.

பாயுங் கவனக் கடியமனப் பரிகா வாமற் கொடுவிடயப், பகைகா வாமற் பிறருரைக்கும் பழிகா வாம லிருதாளுந்,—

தேயும் படிசென் றிடையின்றிச் செல்வச் செருக்கர் கடைகாக்குஞ், சிறியேற் காக்குஞ் சிவஞான தேவன் றிருமேனியைக்காக்க,— வாயு மனமுந் தொடர்வரிதாய் வருதல் போதலிரவுபகல், வளர்தல் குறைதல் வெறுப்புவப்பு வறுமை செல்வமிலாததனை,—யாயுந் தமிழக் குறுமுனிவற் கறித லறிதலிலாமைபோ, யறிவே யாகி யுலகொழிய வருள்செய் சுடர்வேற் பெருமாளே. (௫)

## அல்லமதேவர். வேறு.

அகரவுயி ரனையபரி பூரணத் தீர்த்தனை
யடிநிழலி லடையுமெம தாருயிர்க் காப்பனை
நிகரிலல மயனையழி யாதமெய்க் கூத்தனை
நிகழுமனு பவனையரு ளாளனைப் போற்றுது
நகரவர சிடையமரும் வாசனைக் காற்றெனு
நடையிரத மதனன்வலி வீயுமெய்க் காட்டனை
மகரமனை சுவறவெறி வேலுடைச் சூர்ப்பகை
மயிலைமலை மருவுசிவ ஞானியைக் காக்கவே. (௬)

## வசவதேவர். வேறு.

விழுப்பமிலை குறிகுணங்க ளுடிடா தென்றும்
வேண்டுவன வேண்டியாங் களித்தரவே டத்தர்
குழுக்கடமக் கன்புசெய்நந் தலைச்சுமைவாங் குபுதான்
கொண்டவனென் றரியசிவ ஞானியைக்காத் தளிக்க
விழிப்பின்மை தொருநாமம் புகல்பவரைப் பிறப்பி
லெடுக்குமக் கிஃதரிதன் றெனச்சென்று கடிது
வழுக்கிவிழு பவரையெடுத் தஞ்சலோம் பென்ற
வசவதே சிகனெனுமெங் குடிமுழுதாள் பவனே. (௭)

## தேவாரமருளியமூவர்.

இளக்கிலா நாமணியி னுவே யாகக்
கேட்கிலாக் காதுசி யின்கா தாக

வளர்க்குமா புகழுலகிற் பரப்பா நின்ற
மயிலைவளாச் சிவஞான தேவற் காக்க
வளக்கிலாத் தமதுளைபூந் தொடைப்பு னைந்த
வரசுபோன் றல்லனபுன் குறும்பு போலக்
கொளக்குறையாப் பெருஞ்செல்வ மெமக்கா ஞானக்
கூத்தனுறு பதிகள்பல பாடியமூ வருமே. (அ)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

அருந்தமிழ்நா டொருகோடி தவஞ்செயவந் ததிர்வெள்
ளருவிதூங் குயர்மயிலை வரையினமர் விளக்கைப்
பரந்துபடு மிகுபாச ஞானமொடு மற்றைப்
பசுஞானங் கடந்தசிவ ஞானியைக்காத் தளிக்க
விரிந்தமறை யொருநான்கு மெழுதுகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடையோ னெழுதத்
திருந்துதமிழ்க் கோவையொரு நானூறு முரைத்த
திருவாத வூரனெனுஞ் செழுமலர்க்கற் பகமே. (கூ)

## சென்னவசவதேவர். வேறு.

அறிவுயிர் கரண முடலொடு பொறிகள் சிவமென வுதவு தானியைக் காத்தெமர், வழிவழி யடிமை யெனவருள் புரியு மொருவனை யெமது பாவனைக் கேற்றிடு, மழுதினை மணியை யடியவ ருயிரை யுயர்சிவ சமய நாதனைப் பார்த்துறு,—குறி குண நிலைகள் குருசிவ சரணர் தமையிகழ் பவரை வேறெனத் தாக்கியை, வளர்தரு தனது குணவருள் கனலி னழல்புனன் மருவு மாறெனத் தாட்டுணை, குறுகிடு பவரை யடைவுற வுல கின் வருசென வசவ தேவனைப் போற்றுதும்,—பொறியொரு புடையில் வளையொரு புடையி லிரவியி னிருளை நாமறத் தீர்த்தெரி, மணிமிளிர் திகிரி யொடுபல வணிகண் முடியொரு புடையி லாருயிர்க் காப்புறு, புயனிற வடிவ வரியொரு புடை யில் விழவர வணையை வானுறத் தூக்குபு,—மறிதிரா கதறு

கடலிடை யுதறு பொறிமயில் கடவு வீரன்மெய்ச் சீர்த்தியன், மலைமுனி முருக குருபர குமர சரவண பவவெ னுமிகப் போற்றிட, மறைமொழி யருள்செ யறுமுகன் மருவு மயிலைவருசிவ ஞானியைக் காக்கவே. (௧௦)

காப்புப்பருவம் முற்றிற்று.

## செங்கீரைப்பருவம்.

துங்கவெம் புகர்முகக் களிறல்யா னையினதட் சுமையும் பெரும்புலி தருந், துகிற்சுமையும் வெண்மருப் புச்சுமையு மிலையாது துள்ளியெழு சிறுகன் றுமான்,— வெங்கனன் மழுச்சுமையும் வெண்முளரி மலர்வென்ற வெண்டலைச் சுமையுமணிகள், வெயிலெறித் திருள்விழுங் கோரா யிரம்படம் விரிக்குமர வச்சுமையுநீ,— ளங்கம் புரண்டுவல மாலயம் புரியுமவரணியெனத் திரைகள் புரளு, மாயிரந் திருமுகக் கங்கையஞ்சுமையுமொழு கமுதகிர ணக்குழவிவெண்,— டிங்களஞ் சுமையினொடு போகட் டுலாவுமிறை செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடியருளே. ()

வென்றிவிடை யினர்திருக் காமநா யகர்திரு விழாமுற்றவருண்மா தவர், வேறுவே றுயதிரு வேடத்தர் நீறுதிமிர் மேனியினர் வேணிமுடியர்,— துன்றிழை மலிந்தகர் தைச்சுவலர் பட்டுமென் றாசுமணி யாரமணிவார், சூலப் படைக்கலத்தினர்தனித் தவாருகு தோகையர்க ளோடுவருவார்,— குன்றுறழ் பணைக்கைவெங் கரிசிவிகை யாதிமிசை கொள்பவ ரியக்கழங்கக், கோடிநூ றாயிரவர் மகரா லயத்தொடிகல் கொண்டதோர் செயலதென்னச்,— சென்றெதிர் முழங்குபொம் மையபட் டினச்செல்வ செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடியருளே. (௨)

ஒருவாறு மின்றியிது வென்றுணர வரியபர மொன்றி
ரண் டாகி யவையும், வுருவாகி மூவிரண் டாறுறு வகையிரட்
டுற்றநூற் றெட்டுவிரிவா,— யிருவாறு நின்றிலகி யிருநூறு
தலையிட்ட வீரெட்டு மாறுறினவ், வெண்பெற்ற வாறினவ் வா
றுமூன் றினிலவை யிரண்டினி லிரண்டுமொன்றின்,— மரு
வா வடங்கிநீ நானென்னு மயலின்றி மனவா சகங்கடந்து,
வந்துகூடுதலகற லின்றிநின் றிடுநிலையை மலரடி முடிக்கணி
த்துத்,—திருவாய் மலர்ந்தெனக் கொருமொழியி லருள்பவா
செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமு
னிவ செங்கீரை யாடியருளே. (௩)

பாவகப் படுபெரும் புகழிமய மலைபெறு பவானிவளர்
திருமுலைத்தண், பாலுண்டு தண்டையந் தாள்சிவந் திடவாதி
பகவன்வியன் மார்பினுலவிப்,— பூவகப் பள்ளியமர் தருபுங்
கவன்றலை புண்படக் குட்டிநீடு, பொன்னங் குவட்டுமா யிரு
ஞால முடிவைத்த புழையெயிற் றரவசைத்து,— மாவலர்ச்
செங்கைகொடு சிறுதே ருருட்டியுயர் வானவர்க் கிடர்விளை
த்து, வலிகொண் டிருந்தவன் றிறலசுரர் தலைவெட்டி வட்டாடு
மொருவெற்றிவேற்,— சேவகப் பிள்ளைதுணை யாகவிளை யாடு
வாய் செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான
மாமுனிவ செங்கீரை யாடியருளே. (௪)

பெருமுடக் காணிமிர்ந் ததுகூ னிமிர்ந்தது பிணிகள்பல
பலபோயின, பிடித்திருந் தெவரானு மகலாது துயர்செய்த
பேயகன் றிட்டதம்மா,— வருமகப் பெற்றுவந் தனமிழ யக
ன்றன மகிலம் புரக்க வருமோ,ரரசெய்தி னஞ்சென்று வென்
றெய்து தற்குமிக வரியபகை வென்றெய்தினம்,— வருமடக்
கொடிமாதர் கண்வலைப் பட்டதுயர் மாற்றவற நெறிகண்டன,
மமையை கருமங்க ணிலைகண்டி லோமென்னு மக்களொலி
விண்ணளப்பத்,— திருமடத் தரசிருந் தருள்செயருள் விழி

யாள செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடியருளே. (௫)

மெய்தயங் கரிசனம் பூசிவெண் ணீராட்டி விழியூதி மெய் துடைத்து, விரனிலந் தைவந் திடும்பொட்டின் மீதலையின் வெண்ணீ றணிந்துவிழியின்,—மைதயங் குறவெழுதி யியல் பாகு மக்கமணி வடமணிந் தம்பொனரைஞாண், மணியரிக் கிண்கிணி சதங்கைபொற் றண்டைகள் வனைந்துபொற் றொட் டிலுய்த்தே,—யெய்தவந் துறுபெருஞ் செல்வமே யமையாத வின்சுவைத் தெள்ளமுதமே, யென்னுயிர்த் துணையாய மா ணிக்க மதலையே யென்றுசீ ராட்டியன்பாற்,— செய்தவம் பெருகுமம் மைவளர்க் குங்குழவி செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடியரு ளே. (௬)

வேறு.

மூந்துதவு வார்களிடை யொன்றூர்வங் கூர
முந்தையினு மோர்பொருளை நின்றீகின் றூரில்
வந்துநிகழ் காருதவு றுங்காறங் காறு
மண்டுதிரை யானிறைய வொண்காவின் றேறல்
கந்தமலர் வேனிலுமி ழுஞ்சீர்பொன் றூத
கம்பரொரு மாவினுமை யுந்தாமுஞ் சார
நந்துநக ராளுமிறை செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (௭)

வஞ்சமல மாயைகரு மஞ்சார்வின் றூட
மண்டுவிழி நீர்சொரிய நின்றேயன் பாகி
நெஞ்சுருகு வார்துணைவ செங்கோசெங் கீரை
நின்றநிலை பேர்தலிலி செங்கோசெங் கீரை
விஞ்சுருவ மோடருவி ரண்டோடொன் பானும்
வெம்புபுனை யாதியுமக ன்றூகும் போத

ஞ்சொருப மாவருளி செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (அ)

பங்கயம தேறிநற வுண்டேசங் கீத
பண்கள்பல பாடியொழு குந்தாளொண் காவி
யங்குமுத மூசுபிணை ரந்தாள்கொம் பூதி
யம்பணில வாவியினும் வெஞ்சூல்கொண் டேகி
மங்குறுயில் சோலையினு மங்கோடிங் கோடு
வண்டுதிரி கீழ்நதியு ளின்கேளின் பூசை
நங்கைநகர் வாழிறைவ செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (௯)

கம்பநகர் வாழிறைவ செங்கோசெங் கீரை
கங்கைசும வாதபர செங்கோசெங் கீரை
செம்பொன்முடி தாழ்சரண செங்கோசெங் கீரை
செங்கைமணி நேர்தலைவ செங்கோசெங் கீரை
யிம்பர்வரு மாரமுத செங்கோசெங் கீரை
யெங்கண்மல நாசவொளி செங்கோசெங் கீரை
நம்புமடி யார்துணைவ செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை (௰)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

## தாலப்பருவம்.

ஆற்றற் பெரியோ ராற்றுவார்க் காற்றல் பசியை யாற்று தலென், றுரைந்த மொழியைக் கடந்துசிவ னடியா ரொனுநல் விருந்தழைத்துச்,— சோற்றுக் குவடு தொலைத்தசிறு தொல் லைப் பூத மொருகோடி, தொலைத்தற் கரிய செஞ்சாலிச் சோ றுங் கறியுங் கைக்கவிப்ப,—ஆற்றற் கமைத்த பாறயிர்நெய் யுதிர் தீங் கனியு முறைமுறையே, யொழுகு பந்தி பலவிருத்தி யுவ

ந்து படைத்துத் தீப்பசியை,— மாற்றிப் பெருஞ்சீர் பெறுத ற்கு வல்லாய் தாலோ தாலேலோ, மயிலை வரையிற் சிவஞான மணியே தாலோ தாலேலோ. (௧)

அருவா யுருவா யவையன்றி யறிவாய் நிற்கு மவிர்சடி லத், தண்ணல் பெருஞ்சீ ரிசைப்புலவ ரறைதல் பட்டாங் காத ல்போன்,— மருவார் மலர்த்தண் பொழின்மணிநீர் வாவி பசு ம்பொன் மதின்மாட, மணிமா ளிகைகோ புரநெடுந்தேர் மறுகு ருதலா யினவற்றின்,— பொருவா வளங்க ளிறும்பூது புக ல்வார் புகலும் படியெல்லாம், பொருளே யாகி யேனையபோற் புராண மலது மறைகூறுந்,— திருவார் கச்சி நகரிடங்கொள் செல்வா தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞான தேவே தாலோ தாலேலோ. (௨)

ஆர்க்கு மதுரச் சங்கமளித் தரவ மடுத்த பெருங்கங்கை, யாறு மடுத்துப் பிறைத்தோணி யமர்ந்து சடைச்செந் துகிர்ப டர்ந்து,— பார்க்கு முமைகட் கயலுலவும் பழைய கருணைக் கடலகத்துப், படிந்து பரக்கும் புறச்சமயப் பாம்பு பதைப்ப விடித்துமயல்,— போக்கு மயிலை வரையிவர்ந்து பொருண்மா மாரி மிடிக்கோடை, பொன்றப் பொழிந்து புகழ்வெள்ளம் பொருப்பு வாளக் கரைவாவி,— தேக்கு முகிலே யமுதேசெந் தேனே தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞான தேவே தாலோ தாலேலோ. (௩)

முதையா மெமது மனப்புலத்தை மூடுங் காம வெகுளி வன, முற்றுங் கருணைத் தீக்கொளுவி முருக்கித் திருத்திச் செ ருக்கெனுமா,— மதயா னையைவந் தழியாது மதிப்பப் பொ றைவே லியுமமைத்து, வலிய சிவமந் திரப்படையால் வாய்ப்ப வுழுது சிவவிதையை,— விதையா முளைப்பப் பிறதெய்வ விரவு களைகட் டறவளர்த்து, வீடாங் கனிகொள் பருவத்து விடயக் கரவர் புகுந்ததனைச், சிதையா வண்ணங் காத்தளிக்குந் திறத்

தாய் தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞான தேவே தாலோ தாலேலோ. (௫)

வாங்கு சிறுவெண் மதிக்குழவி வயங்கு முடியு மதன்மாள, மலர்ந்த விழிசேர் திருநுதலு மதிநேர் சங்கக் குழைப்பணியே, —தாங்கு செவியுங் கடற்காளந் தரித்த மிடறுங் கனன்மழு மான், றயங்கு கரமுந் தனிக்கேழற் றடங்கோ டிமைக்குந் திரு மார்பு,— மோங்கு சினவெம் புலியதளொன் றுடுத்த வரையு மான்மலர்க்க, ணூற்ற வடியு நின துண்மை யுணரா வஞ்சஞ்செ யக்கருணை,—தேங்கும் விழிக ளேயதனைச் செய்யாதாலோ தா லேலோ, தேடற் கரிய சிவஞான தேவே தாலோ தாலேலோ.

## வேறு.

மீனெ னப்பிறழ் மதர்நெடுங் கட்சிறு வின்னுதற் றுவர் வாயார், வேட்கை நோய்தவிர்ப் பவர்க்குமட் புனலிடை வேறு செய் தேறேயோ,—வூனு யிர்க்கொரு பிரிவுதந் துதவுறு முத் துமா தாலேலோ, வுருவ மாகிவந் தென்கருங் கன்மன முருக்கு வாய் தாலேலோ,— வான ளக்குறுங் காலென வெய்திடும் வைந்நுதிக் கணையென்ன, வாரி யுட்புகுங் குடமென வுட்புற மருவிநின் றகலாம,— ஞானி னைப்பரும் பரசிவத் துறவரு ணற் றவா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (௬)

பாரி னிற்பெருஞ் செல்வமுண் பவர்க்கெனப் பற்றிநின் றுண்ணுமற், பனைப ழுத்ததற் கொக்குமூர் நடுநயப் பண்பி னோன் றிருவென்னுஞ்,— சீரி யற்படு மொழியெமக் கல்லது திருவுடை யோர்தம்மிற், சிலர்க்கு ளைப்பது முகமனென் றுணர்த்துறு செய்கையொன் றுடையோனே,— கூரி சைப்படா விவறன்மா லையனிடைக் குறுகுறு தீவோர்கட், குறுகு வாரிற் சண் பகம்விடுத் தொள்வழைக் கொத்தில்வேள் சிலைவாங்கு,— நாரி மொய்த்தெழு மயிலைமால் வரைக்கொரு நாயகா தாலே லோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ.

கல்லெ னத்திர டோட்புனை யீர்ந்தொடைக் காமவே ளுண
கெல்லாங், கவன் று தன்வலிக் குடைந்துதம் புறந்தரக் கண்ட
தோர் மிகுவீரன்,— வில்லி யற்சுவைக் கரும்பும்வெம் பகழி
கள் வீயும்விற் குழைநாரி, விளரி யங்குரற் சுரும்புமாய் மூழ்க்
துற விளைத்தவோர் விறலாளா,— சொல்லி சைப்படு சங்கவண்
புலவர்தங் தூக்கொடு நிறைநிற்பச், சொக்கர் கூடலிற் பொற்
பல கையினிடாத் தூக்கினும் படியொக்கு,— நல்லி சைத்தமிழ்
மாலைகு டியபுகழ் நல்லவா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சி
மா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (அ)

வேறு.

ஒருமா யையினுயிர் மாபரம் வேறு மாபோலு
முதுபோ மெனினிலை பேதமெ ளுவோ தாவீயா
வருமா மறையுரை யாடலும் வேறு மான்மாவோ
டருளார் பதியியல் பாயென வோதா மாறுவாய்
வருமா கமமுறை யாடலு மாரா யாராயே
மலைவா துசெய்மய லாறுள மோவா நோவாவார்
செருமாய் வுறுமொரு வாசக தாலோ தாலேலோ
சிவஞா னியெனுயிர் நாயக தாலோ தாலேலோ. (கூ)

நனவா வொருசிவ மோதிறை தாலோ தாலேலோ
நவிலு வலர்புகழ் மாலைய தாலோ தாலேலோ
கனவா வுலகுறு தேசிக தாலோ தாலேலோ
கதிர்வே லவன்மயி லாசல தாலோ தாலேலோ
மனவா சகவினை மேவிலி தாலோ தாலேலோ
மதனு டல்கொலடன் மாதவ தாலோ தாலேலோ
சினவா வருளித யாலய தாலோ தாலேலோ
சிவஞா னியெனுயிர் நாயக தாலோ தாலேலோ. (க0)

தாலப்பருவம் முற்றிற்று.

# சப்பாணிப்பருவம்.

காளம் புரைந்தநெட் டுடலமுற் கட்கொடிய காலன்வந் தனன்வந்தனன், கண்டவா றிஃதுரைத் தனமுரைத் தனமெ ன்று கைதட்டி விடுவதென்ன,—வேளம்பு தைத்தலறும் வஞ் னெஞ்ச ரிவ்வுலக மெய்யென்ப திலையென்பவர், விரிசடைக் கடவுளடி யவர்வரவு கண்டுள்ள மிக்கெழு மகிழ்ச்சியென்ன,— வாளம்பு யத்துணர்ப் பதமுக்க ணிறைபுக ழமிழ்த்தபுன் சமயீ மென்புள், ளணிகடிவ தென்னமழ விடையொன் றுகைப்பவ னரியபுகழ் பாடியாடத்,— தாளம் புடைப்பதற் கடியிட்ட தென்னநீ சப்பாணி கொட்டியருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டியருளே. (க)

மொண்டுபொய்ப் பொருளென்று பொருளையிர வலர்வ ரின் முத்திரைசெ யாமலுதவி, முழுமறைப் பொருளைமெய்ப் பொருளென்று தொண்டர்க்கு முத்திரைசெய் தீங்கருள்வது, —விண்டுமது மடைதிறந் தொழுகுபைங் கொன்றைபுனை விரி சடைக் கற்றைநெற்றி, விழியுடை யவர்க்கலது குவியாத திலை யென்று விரியாத தேதிலார்முன்,— கொண்டவெம் பவநீறு படநீறு தன்னைக் கொடுப்பது நடுங்கவாவி, கொள்ளைகொண் டுண்ணவெம் பால்வரும் கொடியவெங் கூற்றைத் தடுப்ப தாய,— தண்டளிர் கவற்றுநின் கையிணை லையநீ சப்பாணி கொட்டியருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானி யே சப்பாணி கொட்டியருளே. (உ)

உருக்கிளரும் வடிவென்று நிலையாத விடயத்தி லுழலும் புலன்களென்று, மொழிகின்ற புத்தியது தானென்றும் விரி வாகி யொன்றாய குணமதென்றும்,— பரக்குமிவை யன்ற ன்று புருடனே யென்றுமுயர் பகுதியே யென்றுமதன்மேற், பரவிந்து வென்றுமவை யன்றியே மனமொழி படாதவொரு

பிரமமென்றும்,— விரிக்கிலிது நிறைவென்று மணுவென்று மொன்றென்றும் வேறுபற் பலவென்றுமெய், வினைவென்று மிலதென்று முயிரியல்பு பலசமயர் வேறுவே றுகவைத்துத்,— தருக்கமிடு கலகமற வந்தகரு ணாகரா சப்பாணி கொட்டியருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டியருளே. (௩)

மும்மைமல முங்கதிர்க் கற்றைவட் டப்பரிதி முன்னிருள் செய் திரமதியின், முழுநில வெறிக்கும்வெண் டிறுநீறு ஞான மென்னு மொய்குழலை மன்றல்புரிவா,— ரெம்மணிய தென்று புனை நன்முகக் கண்டியுட னிறைவனரு ளஞ்செழுத்து, மிலிங் காங்க சங்கசம ரசநிலைமை யிதுவென்ன விருளற வுணர்த்து குருவு,— மெய்ம்மையுணர் வொடுகலந் தற்றிருந் தங்கையின் வெளிப்பட்ட ஞானவடிவும், விளங்குசர மும்புனித தீர்த்த சிவ சேடமும் மேலுலக வித்தென்றவை,— தம்மையுல கினில் விளக்கியவந்த தேசிகா சப்பாணி கொட்டியருளே, தனைய றியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (௪)

உமைமன மிறந்தவொரு தனிநிலைமை யிதுவென்ன வுள்ளபடி முனிவர்நால்வ, ருணர்ந்திட வுணர்த்துதற் குற்றதவ யோகத்தி னெண்ணுதற் கண்டிறந்து,— பொருமதனை வென்றனன் பரமனென் கின்றசிறு புகழன்றி யோகநிலைமை, பொன்றியங் கவன்வென்றி கொள்ளலாற் படுதோல்வி பொன்றலற வெய்தினனெனும்,— வமைவில்சிறு மொழிபுகா தெண்ணிலோ ருணரவரு மறைமுடி வுணர்த்தி வெய்ய, மதனன்வந் தொருகணமு மெதிர்நிலா தொழுகுதவ மாயாத நிலையினுடனித்,— தமையினிடை வந்தருளு மெம்பரம யோகியே சப்பாணி கொட்டியருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டியருளே. (௫)

## வேறு.

பெருவாழ் வுற்றிடு தீயர்செ ருக்குல கிற்கோரிற்
 பிழையாய் முற்றிடு மாறெனை நத்திட ருற்றுழ
விரைதேர் புட்குலம் வாயிரா யிட்டிரி யக்காவி
 யிதழ்சா யத்தடு மாறி வரிக்கயல் கெட்டோட
வெருவா மொய்த்திசை பாடளி மட்டுணல் விட்டேக
 விளையா டித்தட வாளை குதித்தெழு பொற்பாய
திருவார் கச்சியர் நாயக கொட்டுக சப்பாணி
 சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (சு)

குருநீ பத்தொடை யாளி யெதிர்த்த விறற்சூர
 குலமாள் வித்தவன் வாழ்மயி லைக்கிரி பொற்பார
வருநீர் மைக்கரு ணாகர கொட்டுக சப்பாணி
 மலமா யைப்பகை யானவ கொட்டுக சப்பாணி
கருநீர் மைத்திரு மாலடி யுய்க்குமெ னப்பூசு
 கவர்நா மக்குறி சேர்தரு நெற்றிது டைத்தீசர்
திருநீ றிட்டிடு மாதவ கொட்டுக சப்பாணி
 சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி (எ)

ஒருமா தர்ப்பிறை வாணுதன் மைக்கண் மலர்க்கோதை
 யுமைகா ணக்கம லாலய ஞொத்துற நற்றுளம்
வருமான் வத்திர னோர்கொளு மத்தள முற்பேசு
 மகிழ்வீ ணைத்தொழி லாரிசை யொத்திசை யப்பாட
விருமா தர்க்குயி ராமுரு கற்பெறு நிட்காம
 விறையா டப்புல வோர்புனை மெய்க்கவி தைப்பேர்கொ
டிருமா லைப்புய மாதவ கொட்டுக சப்பாணி
 சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (அ)

எளியா ரைப்பெறின் மேனிப தைப்ப வலைத்தாவி
 யெதிர்வா ரைப்பெறி னோடு மறச்சிறி யர்ப்போல

வொளியா மூற்சிறு மீனெதி ரக்கவர் வுற்றுடி
யுகள்சே லூற்றிட வாயிழை சக்குபு கொக்கோடு
மளியார் மட்டலர் வாவியு டுத்தற நற்சாலை
யழகார் கச்சிநி வாச கருத்தும ருட்பாடு
தெளியார் கட்கரு ணீர்மைய கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (௯)

பூதையா மெய்ப்பொரு ளீகைய கொட்டுக சப்பாணி
பொழில்சூழ் கச்சியின் வாழ்பவ கொட்டுக சப்பாணி
மதயா னைப்பொறி காவல கொட்டுக சப்பாணி
மறைவாய் மைத்திரு வாசக கொட்டுக சப்பாணி
சுதையா மெய்ப்பொடி மேனிய கொட்டுக சப்பாணி
தொழுவார் கட்கரு டேசிக கொட்டுக சப்பாணி
சிதையா நற்குண தாபத கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (௧0)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

---

## முத்தப்பருவம்.

அருந்து மமுதி னினியதா யன்போ டளைந்து படிறிலதா, யறைந்த மொழிதத் துவமசியி னன்றி மாறு வியல்பினதா யப்,—பொருந்து மறையா முடம்பிற்குப் புக்க வுயிராய்ப் பவ க்கடற்குப், புணையாய்க் கயிலை வழித்துணையாய்ப் பொலிந்த திருவஞ் செழுத்தென்னும்,—பரந்த புகழ்மந் திரவேந்து பவனி போதுந் திருமறுகாய்ப், பனிவெண் டிங்கட் சடைமுடி யோன் படிவ முணர்த்தும் விளக்காகித்,— திருந்து பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே, திளைக்கும் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே. (௧)

எல்லாத் தேவர் தம்துயிரு மிமைப்போ தினிலுண் கரிய கடு, வீன்ற வோதைக் கடன்முத்த மெனைத்தும் வேண்டே மெழின்மதவேள்,—வில்லாய்க் கொலைசெய் தொழில்படைத்த வேழக் கரும்பின் வெண்முத்தம், விரும்பே மலர்ப்பூம் பொழி ற்றிருநெல் வேலிப் பதியின் வேய்முத்த,—மல்லாற் கருங்காட் டிரிளைத்து மலமந் தழியக் கதமொழியை, யாக்கு நெடிய வேய்முத்த மனுகேஞ் சிறிது மருளின்மொழி,— செல்லாப் பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே, திளைக்கும் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே. (௨)

களரின் முளைத்த செங்கரும்பு கண்ணுற் பயந்த விளங் குமரன், கதிர்கான் றெழுசெம் பரிதியுடல் கறுப்பச் சிவந்த சுடரிலைவேற்,—றளிரி னியல்வென் றுலவுசிறு தவளை வாய்ச் சில் லரிக்குரற்பூஞ், சதங்கைச் செம்பொற் சிறுதண்டைத் தாளென் றலைமேல் வைத்தபிரான்,—விளரி வரிவண் டிமிர்கு வளை வியன்சீர்த் தணிகைக் கருங்கல்லின், மிசைப்பூப் பித்தா னெனக்கருதி விளையே னுள்ளக் கல்லிடைத்தாண்,— முளரி மலர்கள் பூப்பித்த முதல்வா முத்தந் தருகவே, முருகன் மயி லைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (௩)

கற்ற புலவர் மிகச்சிறந்து காட்டு மொன்றன் வளமெடுத் துக், கவியால் விரித்துப் புகன்றியம்பக் கருதி யதுபொற் குன்றநா,—ணுற்ற மணிப்பொற் கோபுரமோ வொளிர்பொன் மாட மோமுகில்வந், துறங்கு மதிலோ மாளிகையோ வுலவு திருத்தேர் மறுகோசீர்,—பெற்ற குடிகண் மனைவளமோ பிரச மலர்த்தண் டலையோநீர், பெருகு தடமோ வெனவிறைவி பிறங்கு கோயிற் றிசைபோல,— முற்ற மயங்குஞ் சீர்க்காஞ்சி முதல்வா முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (௪)

இணையி றிருவள் ளுவப்பெயர்கொ ளெம்மான் காப்பா
ரிரவன்மி, னென்ன விரந்து மிரத்தக்கார்க் காணி னிரக்க
வென்றுரைத்து,— முணர்வு தெருள்வித் தமைகொண்டே
யொருவர் தமையு மிவ்வளவு, மொன்று மிரந்தா மல்லமியா
முன்னை யின்றீங் கிரக்கின்ற,— மணையு மவர்தம் முகக்குறி
ப்பா னறிந்தங் கவர்த மகம்விழைந்த, வனைத்து மமுத முறழீர
மளைந்த வின்சொ லுடனளிக்கு,— முணையில் கொடைச்சிந்
தாமணியே முகிலே முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவ
ஞான முனிவா முத்தந் தருகவே. (ரு)

வேறு.

அதிர்செய் கடலகன் ஞால முடியர விற்கெலா
மரசு நடுமுடி யீனு மெழுசுடர் வட்குமோர்
கதிர்கொள் புதுமணி கோடு கொடுமிடி யுற்றுளார்
கடையு மணிகொடு வீசு மவனென நிற்றறீர்
துதியி லுடல்பொரு ளாவி கொடுதமி யற்குமா
சுருதி முடிவுறு மாசில் பொருளுத வுற்றகூன்
மதியின் முடிமதி யாள பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (சு)

கருவி யுடல்பொறி பூத முதலன முற்றுமே
கழல்பு தனியறி வாகி யொருபிர மத்துமாம்
விரவி யதுவடி வாயி னமெனுமோர் சுட்டுமே
விளிய வரம்வாடு சேற லருகயல் கொட்புறு
வருவ முருவமி லாத நிலையொர்க ணத்துளே
யருளு மொருமொழி யாள திருவளர் கச்சியூர்
மருவு பெருகருள் வாரி பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (எ)

நிறையு மருண்மழை மேக மெனவும றப்புறு
கிதிய வளையொடு தாம மாயெனவும் வற்றுறு

துறையு மலிதயை வாரி யெனவுநி னைப்பரா
   யுணர்வு தருகலை யோதி யுணர்வும யக்கிலா
ரறையு மொழிகொடு மேவி நினையிரந் தற்றுநா
   மலது பிறர்தமை யாது மருவியி ரக்கிலே
மறையி னிலைதவிர் யோகி பணிமணி முத்தமே
   மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (அ)

குதலை மொழிமருள் பேதை * பிலநதி மட்டுவார்
   குவளை மதர்விழி மாலை மதியைம ருட்டுவா
ணுதலை வழிபட வேகி மறியும்வி யப்போடே
   நுவலி லளவில வாகும் வளமலி கச்சியாய்
திதலை முலைமட மாதர் கொடுமைய விற்படார்
   திகழு மனமுடை வாய்மை நெறியறி ஞர்க்கெலா
மதலை யெனவரு தூய பணிமணி முத்தமே
   மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (கூ)

இயலு மொருகுட வானை யதனுளி ருக்கவா
   னெனவ றிவுறவு பாதி யறவறி வித்தல்போ
லுயலி லுடலினும் மேவு முயிர்பிர மத்தின்வே
   றுழிய வொருபொரு ளாகு மெனவறி வித்தவா
செயலொ டுமைமனம் யாவு மதியம ருட்டுமோர்
   திலக நுதலுமை பாகர் பணிசெய வுய்த்துவாழ்
மயலி லடியவர் நேச பணிமணி முத்தமே
   மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (கய)

முத்தப்பருவம் முற்றிற்று.

---

* பிலநதி - கம்பை.

## வாரானைப்பருவம்.

நேரா வெமக்குக் கொடுத்தவுட னிலையா தழியும் பொருளாவி, நெறியின் மயங்கித் தமவென்னு நினைவினோரிங் கிவரென்றுந்,—தீரா வெகுளிக் கனற்கிவர்தஞ் சிந்தை முருட்டு விறகென்றுந், தீய காமக் கள்ளுண்டு செருக்கு களியரென்றுமருள்,— கூரா தழுக்கா றெனுமளற்றுக் குழிவீழ் குருடரிவரொன்றுங், கொலையை யஞ்சா ரென்றுமுளங் கொண்டு தமியேமழைப்பவுநீ;— வாரா தொழியல் பெருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (௧)

அணங்க வெம்மைப் பிடித்திருந்த வவாப்பே யகன்றுகுடிபோக,வருள்செ யொருமந் திரவாதி யாகிப் பாச வல்லிருளைப்,— பிணங்கு மொருசெஞ் சுடராகிப் பிறவிப் பிணிக்கு மருந்தாகிப், பிறந்த வன்புக் குழவிக்குப் பெற்ற தாயா யிடும்பைச்சே,— றுணங்க வெழுசெங் கதிராகி யுழலுஞ் சமயக் கடாக்களிற்றை, யுடற்று மரிமா னேருகி யுவந்து தமியே நறுமலர்தூய்,— வணங்க வொருதே வாய்க்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருகவருகவே.

பைந்தா துகுக்கு நறுங்கொன்றைப் பனிமா மலருங் குழவியிளம், பயில்வெண் மதியுந் துளையெயிற்றுப் பாம்புஞ் சுமக்குமன்று நீ,— செந்தா மரைச்சே வடிநோவத் திரும்பித் திரும்பி யோரிரவிற், சேல்வென் றகன்ற வரிமதர்க்கட் சிலைக்கூன் புருவத் தரளநகை,—நந்தா விளக்கின் றிருமனைக்கு நாவனகரின் வன்றொண்டர், நடத்த வொருதூ தாளாகி நடந்தவுனக்கின் றடியேம்பால்,— வந்தால் வருமோர் பழியுண்டோ மதுரக் கனியே வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (௩)

முருந்தேர் நகையார் மயறுரக்கு முத்தே வருக பிறவி வன, முரிக்குங் கருணைக் கடாக்களிறே முன்செய் தவத்தோர் தமக்குவரு,— விருந்தே வருக தூண்டுசுடர் விளக்கே வருக சோதிமணி, விழியே வருக பரமுணர்ந்து விளைக்குந் தவத்தோர் பானிறைய,—விருந்தே கமழுந் தீங்கனியே யிறையே வருக புகழ்நிலா, வெறிக்கு மறுவின் மதியமே யெமையா ளுடையாய் வருகவரு,—மருந்தே வருக பெருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருகவருகவே.

இரவின் முயல்வார் மிடியினா லிரங்கா வுளத்த னெனப்படுத, லிருளாற் பகைஞ னெனப்படுத லிறவாக் கொடுந்தீ வினையினாற்,— பொருவில் கொலைஞ னெனப்படுதல் பொய்யாற் பொய்ய னெனப்படுதல், பொறுமை யதனா லிவனென்றும் பொறுமை யினன்கா ணெனப்படுதல்,—வெருவு முடம்பி னிடும்பையினால் விளங்க வறியா னெனப்படுதல், வெகுளி யதனாற் றறியாத வெகுளி யினனா மெனப்படுதன்,— மருவி யுலகில் வருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலைவரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (௫)

சுருளுங் குடரும் புழுமலமுஞ் சொரியு நீருங் கலந்து புறந், தோன்று வயிறும் வேறொருபாற் றோன்றி நரலை யெனுந் தசைதான்,— றிரளும் புன்மார் புறமுலையுந் திமிரு நறுநாற் றப்பொருளாற், றீர்க்கு முடலைப் புலாலுடம்புஞ் செத்தாற் கிடந்து புறங்காட்டிற்,— புரளுந் தலையுங் கொடுநின்ற புன்மா தனைவா னமுதமே, பொன்னங் கொடியே பசுங்கிளியே பூவாய் மயிலே யென்றென்று,— மருளும் பெரும்பித் தொழியவரு மருந்தே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (௬)

போற்ற வருக வடிமையேம் புகழ வருக நறியமலர், புனைய வருக வருண்மாரி பொழிய வருக வடிகடலை,—யேற்ற வருக

மவுனமொழி யிசைப்ப வருக வெமதுளத்தி, னிருப்ப வருக வறங்கடலை யெடுப்ப வருக நீற்றழகு,— தோற்ற வருக வெங் கண்மய றுரப்ப வருக கொடுங்காமந், துடைப்ப வருக கூற்று வலிதொலைப்ப வருக பிறவிநோய்,— மாற்ற வருக வறிவுருவில் வைப்ப வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (எ)

அற்றங் களையு நின்பெருஞ்சீ ரறைந்த செங்கா விவ்வுலகி, லயலோர் மொழியு மறையாம லன்பா னின்பாற் பற்றுமுளம், —பற்றென் றிங்கட் செயாமலுனைப் பார்த்த விழிகள் பிற பொருளைப், பாரா துன்சொற் கேட்டசெவி பயனில் பிறசொற் கேளாம,— லூற்றுன் றிருத்தாட் குற்றேவ லுஞற்று கரங்கள் பிறிதொன்றை, யுஞற்று துள்ள படிசுட்டா துன்னை யுணர்ந்த பேருணர்வு,— மற்றென் றினையிங் குணராமல் வந்த குரவா வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே.

## வேறு.

மூட்டு மார்புல னுய சேனைகண் முறியமான்
முற்று நானெனும் வேழ மாய்வுற மனமென்மா
பட்டு வீழ்தர வாவி யாமர சுடையவே
பற்றி ஞானநல் வாளி னுலொரு தமியனுய்
வெட்டு பாணிய னுன லாலய விலையெனு
வெற்றி யாலறி வாகு மோர்நக ரிமையுளே
கட்டு மாறெதிர் மாறில் சேவகன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (அ)

டற்றி லாவுணர் வாகி மாமன மருவியே
பற்று வாள்விழி யாறு சேர்புகை தனில்வரா
வுற்றி லாவமர் ஞான நாயகன் வருகவே
யொப்பி லாவருண் மூல காரணன் வருகவே

முற்றி லாமுலை மாத ரால்வரு மயலறு
  முத்தி சேர்வுறு மாறு தீதறு துணிவுறால்
கற்றி லாரறி யாத சீரியன் வருகவே
  கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (௧௦)

வித்து வான்வர வால லாதொரு பிறிதினன்
  மிக்க வாழ்வுபெ றுத வாறென வடியரோ
மத்து வாமுடி வான நீவரு வரவுதா
  னற்று வேறுள வேது வாலுள மகிழ்வுறே
முத்து வாளர வீனு மாமணி மிகுகுவான்
  முற்று மாமதி ஞாயி றுமெனு மயிலைவாழ்
கத்து வாதமி லாத போதகன் வருகவே
  கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (௧௧)

வாரானைப்பருவம் முற்றிற்று.

---

## அம்புலிப்பருவம்.

இரவடைவை நீயிரவை யடையா னிவன்கலை யெண்ணி ரண் டுடையை யிவனெண், ணெண்கலை கடந்தவன் மறுவுண் டுனக்கிவற் கில்லையா லோர்மறுவுநீ,— மருவுமறை நாணிலவை யிவனென்று மழியாது வருபெரும் புகழ்நிலவினன், வளர் குழவி யிற்றொழு வதற்குரியை நீயிவன் வணங்கியிட வென்று முரியான்,— விரவுபெண் மயலுடைப் போகிநீ யிவன்மயலை மேவாத பரமயோகி, விடையுடைப் பாகன்முடி யிற்பொ றையை நீயிவன் விளங்குதளிர் மென்கையில்விடா,— தரவ வணி யற்பொறுப் பவனுத லால்விரைந் தம்புலீ யாடவாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்புலீ யாட வாவே. (௧)

பையரவின் வெவ்விடப் பகுவாயி னிடைசென்று பட்டு
னைப் போலனைந்து, பாதியுமை பங்கனை யிகழ்ந்தவவன் வேள்
வியிற் பல்லொழிந் துழலுமந்த,— வெய்யவன் றனையடைந்
தென்பயன் மெய்குன்றி விளையவிங் கெய்தவரினீ, விரிசி
றைய வாரணச் சினையென்ன வேநின்னை மிசையவரு பைங்க
ணரவ,— முய்யலற வோர்நிலச் சுமையரவை வாயலகினோடிக்
கவர்ந்தெடுத்தே, யுதறுமொரு தோகைமயி றனையேவ வேத
னுக்கொருதுணைவ னாயமுருகற்,— கையனிவ னுரைசெய்வ
னாதலா லுளமகிழ்ந் தம்புலீ யாடவாவே, யருள்கசிந் தொழுகு
விழி யுடையசிவ ஞானியுட னம்புலீ யாடவாவே. (௨)

கரியவண் டிமிர்குவளை யிகலியங் கயல்வென்று காதளவு
மோடிமீளுங், கருநெடுங் கண்ணுடைய வொருமாது குழல்
வெண்மை கருமைசெய் திடுமிவற்குத்,— திரியநின் மெய்யி
னிடை வருகருமை யினைவெண்மை செய்வதரி தன்றுகண்
டாய், சிவமென்று முயிரொன்றும் வேறுசெய் தகலாத திமி
ரமா மலமகன்றே,— யிரியவருள் குடியிருக் கின்றவிழி மலர்
திறந் திணைமலர்ப் பதமுடியின்மே, லிருத்திமன மொழிகடந்
துடனின்று குறிகுணமு மின்றியரு மறைதனக்கு,— மரிய
பொரு டனையளிக் கினுமளிக் குவன்விளைந் தம்புலீ யாட
வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்
புலீ யாடவாவே. (௩)

உந்துமா ருள்பிறந் தெழுதரு மிவன்றிரு வுள்ளத்து
முனிவில்லையென், றுன்னல்சிறு விதிமகத் துறுமமரர் தம்
மையு முன்றனையு மமர்குறித்து,— வந்தமா மதனையுங் கண்
புன றுளிப்பவே மனமுருகி மெய்யன்பினான், மலர்கொண்டு
பூசனை தொடங்குமொரு தொண்டன்மேல் வஞ்சினங் கொ
ண்டு வெம்பிச்,—சிந்துமா ரழல்விழிப் பணைமருப் பெருமை
யிற் சென்றகொடு மறலிதனையுஞ், சிரமைந்தொ டைந்துடைய

திரள்புயத் தெறும்வலித் தியனையு முன்வெகுண்ட,—வந்தவா தனையிருப் பினுமிருக் குங்கடிதி னம்புலீ யாடவாவே, யருள் கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்புலீயாடவாவே.

நெடிமைகொண் டவிர்பவள வார்சடைக் கற்றையு நெளி திரைக் கங்கைநதியு, நெட்டுடற் கட்செவிப் பணியுமத னைத் தெறு நெற்றிமிசை யொற்றைவிழியுங்,— கடிமைகொண் டுடு கவைக் காளெடும் பகடூர்ந்து காளமே கம்புரையுமோர், காலனு யிர் கொண்டசெங் கமலமல ரடியின்மால் கண்ணுநீ காணுமை யான்,— மடிமைகொண் டிங்கழைத் திடவுமொரு மனிதனென வாரா திராதிகண்டாய், வழங்குமுடல் பொருளாவி கைக்கொ ண்டு மருளாத மனிதரைத் தனதருளினு,— லடிமைகொண் டிடவந்த கள்ளவடி வினன்விரைந் தம்புலீ யாடவாவே, யருள் கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்புலீ யாடவாவே.

நறியமலர் விழிசிவந் துனைவருக வென்றில னடந்தநங் கனமாயின்யா, நணுகவரு வாயென வழைத்தெதிர் விடுக்கில நாண்மலரின் முகமலர்ந்து,— சிறியநகை யிளநில வெறிப்ப வரு கென்றனன் செயற்கைவடி விதுவன்றுதன், திருமுடி யணிக்கிஃ தியற்கைவடி வெனமனந் தெருள்விலார்த் தெருள் விக்கவோ,— வறியவுரு வாமிரவி யெதிர்மழுங் குறுசிறு மை மாற்றியொளி பெறவைப்பவோ, மாசுட றுடைப்பவோ குறைதவிர்த் தருளவோ மனத்திவர் நினைத்தநினைவை,—யறி யகில மறியாமை யறவருளு குரவனுட னம்புலீ யாடவாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுடனம்புலீ யாட வாவே. (௬)

## வேறு.

ஏதி லார்களிகழ் காம ரோயதுற வேற றங்கடையு டை யரா,மேது போலவதெண வேயி ராதிமுன மீறில் வெம்பவ மரு

வுமோர்,— நீதி ஞ * னிறி நாம் னுமொருவன் ஞானி யங்க
ழல் செறியவே, தேறி நீவருதி யாலெ னுவினைக டகொள்
பஞ்சென வழியினால்,— வேதமா முடியி னோது மோர்பொ
ருளே மேனி யிந்திய முதலவாய், மேவு பாதிகளை மோதி யோர்
மொழியில் வேற றும்படி யுதவினு,—னுத லாலிவனு மோகை
யாலருளு மாட வம்புலி வருகவே, யாசி லாதசிவ ஞான தேவ
னுட னுட வம்புலி வருகவே. (எ)

வெயிலி லங்கிழை மாத ராடவர் விரக மொன்றுறு மவ
ரொலாம், விரியும் வெண்டிரை வேலை யூடெழ வெளிறும் வெங்
கடு வெனவெழா,— முயலி ரந்தசை யாது தானுடன் முறுக
வெந்துற வடலையான், முழுகும் வெங்கன லாகு மாலென
மூனிய வுன்றனை யகலெனு,— தயர்வு ளந்தரு காம நோய்கள
வினும டைந்திட வறிகிலா, வமல நெஞ்சின னுத லாலிவன்
வருக வென்றன னருவிதாழ்,— மயிலை யங்கிரி யாளி யோடுற
வருக வம்புலி வருகவே, மருவ ருஞ்சிவ ஞானி யோடுற வருக
வம்புலி வருகவே. (அ)

முடிவ றுஞ்சக சிவ மாபர மெனம யங்குறு மயலெலா,
மூகை நெகிழ்ந்தளி பாடு மாலையின் முதிர்சி னங்கொளு மரவு
போ,—னெடிய வன்றறி காணு மோர்மக னென்வ ழிந்தொரு
பிரமமா, நிலையி னின்றிடு ஞானி யேவலி னெழுகி நின்றிடு
மவர்கடா,— மொடி வறும்பர போக மேவின ருணரு மங்
கவர் நிலையிலே, யுறுவர் பின்பென வேத மோதிடு முறை யுண
ர்ந்தனை யலைகொலோ,— மடிவ ருஞ்சிவ யோகி யோடுற
வருக வம்புலி வருகவே, மருவ ருஞ்சிவ ஞானி யோடுற வருக
வம்புலி வருகவே. (கூ)

அகல்வி சும்பெழு பாய பேரிருள் பருகு செங்கதிர் வரு
கெனு, னமர ரொன்றுயர் தேவர் தானவர் குரவர் தங்களை

* நின்னிறநாமன் என்றது - சசிவன்னனை.

வருகென்றன்,— முகம லர்ந்துனை யாட நீயிவண் வருக வென்றன னவன்வரு, முகிலு றங்குறு வான ளாவிய மயிலை யந்திரு மலையிலே,—பகையெ னுங்கதிர் காலு மாமணி யரவ முண்டென வெருவனீ, பரனெ டொன்றிய நாக மாலிவர் பறவை கண்டுளம் வெருவுமோ,— மகிழ்வு கொண்டெமை யாளி யோடுற வருக வம்புலி வருகவே, மருவ ருஞ்சிவ ஞானி யோடுற வருக வம்புலி வருகவே. (௧0)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

---

## சிற்றிற்பருவம்.

கடியிற் சிலகஞ் சுகமணிதர் கல்வீழ் மணிநீர்க் குவளைமலர்க், கயத்துப் பாசி யெனவொதுங்கிக் கடிதின் முன்ன ரொணெருங்கிப்,— படியிற் பணியக் கிடையாமற் பாம்பின் றலையிற் பெருஞ்சுமையைப், பகைதீர்த் தொருசெங் கோலோச்சிப் பாது காக்கு முடிமன்னர்,— தொடியிற் பொலிந்த கரங்கொண்டு துடைத்துத் துகடம் முடற்கணிந்து, சுடர்மா மணிப்பொன் மகுடத்திற் சுமப்பச் சிறந்த நினதுதிரு,— வடியிற் புழுதி படும்வண்ண மடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (௧)

அழிக்க வுளத்துக் கொண்டனையே லடங்கா தெழும்வெங் கொடுஞ்சினத்தை, யழிக்க கடலிற் பெருகியெழு மவாவை யழிக்க செருக்குளத்தை,—யழிக்க விருளி னுய்த்திடுமோ ரழுக்கா றதனை மூலமற, வழிக்க காமப் பெரும்பிணியை யழிக்க கொலையை யஞ்சாமை,— யழிக்க வினைகண் மூன்றனையு மழிக்க வழியு முடம்பதனை, யழியா தென்னுங் கருத்ததனை யழிக்க மூல மலவிருளை,— யழிக்க புழுதி கொடுசமை

த்த வடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (உ)

பழித்த வுலக முயிராதி பகவ னெனப்பே தித்தென்றும், பாழ்செய் மூல மலவிருளைப் பதத்தா லழிக்குஞ் செயலன்றிச்,— சுழித்த கடலி லரவணையிற் றுயில்வோ னளித்த மலரயனுற், றோன்று முலக மழித்திடுமத் தொழிலும் புகழ்செய் யாததெனி,— னிழித்த புன்சொற் புன்புலவ ரிசைத்துத் தாமே யிழித்தலுறும், யாப்பே போல விழைத்தளவில் யாமே யழித்து விடுமிதனை,— யழித்த னினக்குப் புகழ்தருமோ வடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (ங)

போக்கு வரவு குறிகுணங்கள் புணர்தல் பிரித லிரவுபகல், புறமுள் ளகன்ற நிரஞ்சனமாய்ப் புகரற் கரிய வவாச்சியமாய்,— நீக்கு முருவக் கலையாகி நிறைந்த வநாதி யாதியாய், நிகரி லகர முதலனவாய் நின்று பலமந் திரமுநால்,— வாக்கு மறையு மாகமமு மற்றுங் கலைகள் பற்பலவு, மண்ணும் புனலுங் கதமெரியும் வளியும் விசும்பும் பேருலகு,—மாக்கும் விளையாட் டுடைக்குரிசி லடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (ச)

செங்கட் கமல மலர்த்தவிசிற் சிறந்து தனிவீற் றிருக்குமொரு, திசைமா முகற்குத் தொழில்படைத்த திகிரிப் படைவால் வளைசுமந்த,— வங்கைக் கமல விழிக்கரிய வழகன் றனக்குத் தொழிலளித்த, லழித்த லெமக்குத் தொழிலென்னி லடுபோர்ப் பனைக்கைக் களிற்றுரியும்,—பைங்கட் பணியும் வேணிநெடும் பவளக் கொடியிற் றிரைதிரைத்துப், பாயுங் கங்கைப் பெயர்யாறும் பணியத் தருகூன் முதுகமுத,—திங்கட் கொழுந்துங் காட்டென்பேஞ் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சுகரமயிலைச் சிவஞான தேவா சிற்றில் சிதையேலே. (ரு)

கொந்தார் மலரு நறும்புகையுங் கொண்டு நினையாந் தொழத்தக்க, குலதேவதையாய் வழிபட்டுக் குறித்துப் பணி யுஞ் செங்கரும்பே,—நந்தா விளக்கே யமுதமே ஞான வடிவே நாயகமே, நாடும் பொருளே யென்றென்று நாளு நினையே பாடுதும்யாம்,—வந்தார் தமது பிணிதீர்க்கு மருந்தாய்ப் பணியு மரசர்முடி, மணியா யெமக்கோர் பற்றுய வரிவண் டொழுகு மதுவுண்ணுஞ்,— செந்தா மரைச்சே வடிநோவச் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சிகர மயிலைச் சிவஞான தேவா சிற்றிற் சிதையேலே. (சு)

வேறு.

இற்றைமணல் கோலியிழி சொற்பொருளை வாளா
வெய்ப்பில்புல வோர்கவியெ னப்புகலு மாபோ
லுற்றொர்பெயர் கூறெமது சிற்றில்சிதை யேலே
யுய்த்தமொழி யோவலவெ மக்கிறைவ னீயே
மற்றுமொரு தேவுளவெ னக்கருதி லேமான்
மக்கள்பிணி யேயலது மற்றருள்செய் யாதே
செற்றறிகி லாவொருவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (எ)

மெய்ப்படிம மேவியடி மைக்குரிமை யாராய்
மெய்ச்செயலி லாதவரு நற்றவரொ ருவோர்
பொய்ப்பெயர்கொள் வாரொனினு மெய்ப்பெயர ராயே
புக்குதவு நீயெமது சிற்றிலெனு வோர்பேர்
வைப்பவளி யாதிதைபு மக்கடலை மீதே
வைக்குமடி யாலிவண ழித்தலற மாமோ
செப்பரிய வாய்மையிறை சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (அ)

ஒற்கவிர வோர்களிலெ னப்புகல்வ தேநீ
யுற்றொருவர் பாலுமுளை வுற்றுரைசெய் யாதே

நிற்கநனி யீகைவினை பெற்றிடுகை யாலே
நித்தமது கோறனினி யற்கைநின தார்சேர்
கற்குமடி யேமிரவ கற்றிலெனு மீதுங்
கைத்தடியி னுலிவண ழித்தறகு மோகாண்
சிற்கனசி வானுபவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (கூ)

மொய்த்தபுழு வாகமுயிர் புத்திமன மாயா
முற்றுமற வேமறைமு டிக்குமணி யாமா
தத்தொமசி யாகியப தப்பொருளி னுலே
தக்கசிவ னீயெனவு ணர்த்தியது தானு
வைத்தநின தாள்படுமி துற்றடிமை யாவே
மைக்கண்மணி யூடுபடு தற்குநிக ராமே
சித்திகட ரும்மொருவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (கம)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

---

## சிறுபறைப்பருவம்.

குன்றவரி சிலைகொண்ட வெம்முடைய நல்லருட் குன்றமே தெய்வமென்றுங், குறுகுமவ னடியவர் குழாத்தினுட் புகுவதே கூறரிய வீடதென்று,— மன்றுளுமை கண்குளிர நின்றுநட நவிலுமொரு வள்ளறிரு வஞ்செழுத்தே, மந்திரமதென்றும்விட யப்பகை யொறுப்பதே வலியென்று முள்ள படியே,— நின்றுதனை மயலின்றி யுணர்கின்ற வுணர்வதே நிலையான வுணர்வதென்று, நெஞ்சினிறை யழியவெகு ளிக்கடுங் கனலெழா நிலையதே தவமதென்றுஞ்,— சென்றுவினை பொடியாக வருள்செயருண் மேகமே சிறுபறை முழக்கி

யருளே,சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை
முழக்கியருளே. (க)

வந்துபிற கடவுளர்க டமையுளைத் துமைகாண மணி
மன்று ணடமாடுமோ, மணியையிகழ் பரசமய நிலைகுலைய வென்
றுறையும் வன்றிறற் பறையதென்னச், — சிந்தைகவ ருந்துயர்
விளைத்துவரு காமமொடு சினமென்னும் வெம்புலிக்குந், தீராத
வாணவப் பேரிருட் குந்தனி தெழிக்குநெய் தற்பறையென,—
கந்தவரு மறிவென்னு மோரிளங் கன்னியை ஞானவடி வாணி
பிரம, நன்மணம் புணர்கின்ற மங்கலப் பறையென்ன நற்றவக்
குன்றமேநீ, — செந்தளிரி னெழில்வென்ற நின்றிருக் கையி
னுற் சிறுபறை முழக்கியருளே, சிவநெறி தழைக்கவரு சிவ
ஞான தேவனே சிறுபறை முழக்கியருளே. (உ)

கருவிளைக் கின்றசிற் சிலமொழி பகர்ந்துசில கடவுளரை
யிறைவரென்று, கண்டியொடு வெளியதிரு நீறிழந் திருள்
பருகு கனலுமுயர் வானகத்தி,— னிருவிளக் குந்திகழும் விழி
யான வெம்மிறையை யிகழ்புறச் சமயர்தங்க, ளிருகவுளி னுங்
கடிதி னறைவதென வெற்றிவே லிறைமயிலை வெற்பின் முடி
மே,— லொருவிளக் கெனநின்று திகழ்பவா செம்மணிக ளொ
ளிர்பணா முடியனந்த, வுரகமென் றிடுபெயர்த் தண்டின்மிசை
நிலமென்னு மோரகலின் மெய்த்தபுகழாந்,— திருவிளக் கிட்டு
வைத் திடவல்ல வித்தகா சிறுபறை முழக்கியருளே, சிவநெறி
தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கியருளே. ()

வார்மணி முலைக்கருங் கயனெடுங் கட்பவள வாய்மலர்க்
குழன்மங்கையர், மலரடிக் கணிசிலம் பரிமணி முழக்கமும்
மதமழை விடாதுசொரியுங்,— கார்மணி முழக்கமுங் குணில்
பொரு பெரும்பணைக் கடன்முழக் கமும்வீரர்தங், கழலொலி
முழக்கமுஞ் செங்குதலை வாய்மகார் கட்டுகிண் கிணிமுழக்
குந்,— தார்மணி முழக்கமொடு வருபரி முழக்கமுந் தருமச

லகண் முழக்குஞ், சதுர்மறை முழக்கமுஞ் செந்தமிழ் முழக்க முந் தமனியத் திருமறுகுலாந்,— தேர்மணி முழக்கமுங் கிளர் கச்சி நகராளி சிறுபறை முழக்கியருளே, சிவநெறி தழைக்க வரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கியருளே. (ச)

நரம்புதிர மென்புதோன் மூளைதசை பலகூடி நரியுமடி செவியசுருள்வா, ஞயுநெட் டலகுவிரி சிறகர்வன் கழுகுமிது நமதென்ன வந்தவுடலு, — நிரம்புதுயர் செய்தடங் காதுழன் ருெழியாத நிரயத் தழுத்துபுலனு, நெறிமருண் டலமந்து திரி கின்ற புன்மனமு மில்லா தியங்குமுயிரும்,— பறம்புபற் பல வாய குணமுமல னென்றுபோய்ப் பாசநிலை குலையநின்ற, படியிலெனை யறிதலே நினையறித லாகவிரு பதமுமென் முடி யில்வைத்துத், — திரும்புத லிலாதவொரு பதமுதவு கொடை யாளி சிறுபறை முழக்கியருளே, சிவநெறி தழைக்கவரு சிவ ஞான தேவனே சிறுபறை முழக்கியருளே. (ரு)

வேறு.

அரிமதர் மழைக்கண் வளர்வா ரவிரறன் மருட்டு குழல்வா, ணணிமதி கவற்று நுதல்வே யனவொளிர் மணித் தொடிய தோள்,— வரியளி மிடிக்கு மிடியா மதுமடை திறக்கு மலர் வாண், மதிமுக மலர்க்கு முதம்வீழ் மணியிதழ் வளைத்த சிலை தாழ்,—முரிபுருவ முத்து நகைநேர் முகிழ்முலை வளைக்கை மட வார், முதிர்படை யெழுச்சி மதவேண் முரசதிர் முழக்க மற வே, திரிவறு தவத்த ரசநீ சிறுபறை முழக்கி யருளே, சிவ முனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (சு)

பழுதிறலை மைக்கு மணியே படுபறை முழக்கு மதுநீ, பணியென வெனைத்து நினையேல் பனைபுரை புழைக்கை யுழல் வான்,—மழைமத மொழுக்கு கவுளுல் வளைபிறை மருப்பு வரை மேல்,வருமரச னுக்கு நிறையா மதுவுறை பிலிற்று மளிவா,— யுழுமல ரயற்கு மலரா ளுயிரொனு மவற்கு மிறையா, மொரு முத னடிக்கு மதனு லொருகுறை படைத்த துளதோ,—செழு

முகில் கவற்று கொடையாய் சிறுபறை முழக்கி யருளே, சிவ முனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (எ)

மறியும்வளி யைச்சு ழுனையாம் வழியுற வியக்கி மணி யாழ், வளரிசை மடுக்க நினைவார் மனவிழைவி னெட்டு மடியா, —யெறியுநின் மலர்க்கை யதனா லெழுபறை முழக்க மடியே, மிருசெவி மடுக்க விழைவே மிகல்கரி முறிக்க வளையா, முறியு மலர் மொய்த்த விணர்வீ முரலளி மறித்து மருளான், முறி யிடை மறத்தி யர்கடாழ் முடிசெருகு கொத்தி னிடையே,— செறியுமயி லைக்கி ரியுளாய் சிறுபறை முழக்கி யருளே, சிவ முனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (அ)

பகழிபுரை மைக்க ணளிவீழ் பனிமலர் முடித்த குழல் வார், படுமுகிழ் முலைத் திருவொடே பனிமதி நிறக்கொ டிய னாள்,— புகழ்வளா தவத்தின் வருமோர் புதல்விசெவி யிற்பரு குபால், புனையுமழ லைச்சொன் மணிவாய் புகலவவள் கட்கி னியனாய்,—மகிழ்மக வினுக்க மையுமா யணியணி யுறுப்பு றவு லாய், வருமரு மகத்த னிமைபோ யொழியமணி முத்த ருவி தாழ்,—திகழுமயி லைக்க னாறுவாய் சிறுபறை முழக்கியருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (௯)

உரைசெயு மெவற்று மெனைநேர் வுறநகர் கனத்த நிலையா, லெனவுல கமிழ்த்து கடைநா ளொலிகடன் மிதக்கு நகர்வா,— ழருள்வடிவ வொப்பி லுமையா ளணிமுலை கறக்கு மருளா, ரமு தமுண மிக்க விழைவா லழுதகுழ விக்கு நிகராய்,— வருநக ரனைத்தும் வளையா மழையிய முழக்கி யெதிர்வார், வரவர விருப்பமுறுமூர் தொறுமலி தவத்த ருடனே,— திருவடி வரு த்தி வருவாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நக ராய் சிறுபறை முழக்கி யருளே. (௧௦)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

# சிறுதேர்ப்பருவம்.

அருவடிவ மாகிமன மொழிகடந் துயர்பிரம மங்கையினு
நெஞ்சகத்து, மணுகிவல் சிறைக்கொடியி னிருவிழிக் கொரு
மணி யமர்ந்ததென நின்றநிலையைக், — குருவடிவு கொண்டு
ணர்த் துறுகுணக் குன்றமே கோடிமா தவர்குறுகியே, குற்
றேவல் செய்தரு கிருந்துநின் றிருவுளக் குறிப்பின்வழியொழு
கிநிற்பக்,—கருவடிவ நிலையென்று செய்யாத கொலைகளவு கட்
காம மேபயிலும்வெங், கயவர்தமை யுறவுகொண் டொழியாத
வென்றனைக் கடிதினரு குறவழைத்துத்,— திருவடிகள் புன்ற
லைக் கணிசெய்த வருளாள சிறுதே ருருட்டியருளே, சிவசமய
குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே. (க)

தகரமலர் வார்குழற் பவளவாய் மடமாதர் தடநெடுங்
கண்களென்னத், தாவுமறி கிடைகிடந் திடுபெருங் கொல்லை
யைத் தண்டிரை சுருட்டியெறியு,— மகரமனை யுண்டதிர்த்
தெழுகமஞ் சூன்மழை மாரியென வந்துபிளிறும், வளைமருப்
புழைச்செவிப் புகர்முகச் சிறுகணல் வலிவேழ மதகனைப்பப்,—
பகரலரு மெறுழ்வலிப் பிறைமருப் பொருகரும் பன்றியது
கண்டுசெவ்விப், பதமென்ன வுழவண்ட முகடுதொடு நெடிய
முதிர் பணைதரள விதைவிதைக்குஞ், — சிகரமணி மயிலைமலை
முருகனுட னமருமிறை சிறுதே ருருட்டியருளே, சிவசமய
குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே. (உ)

யாவர்யா வருமெழுங் கனவிருள் விழுங்குமோ ரிரவி
யைத் தத்தமக்கிங், கெதிரென்று புகல்கின்ற தென்னவிவ் வுல
கில்வரும் யாவருந் தத்தமக்கு,—மேவுமா ருளுடைய னென்
னவரு மவிரோதி விரிசுடர் விளக்கொன்றுதான், விழைய
வொரு கம்பத்து மிசையிருந் தகமெலாம் விரிகதிர் பரப்புமது

போ,— லோவிலா வண்புகழ்க் கதிரொளியை வெண்டிரைய வோதையங்கட லுடுத்த, வுலகெலா மொருமயிலை வனையிருந் தொளிர்விக்கு மொருவமா முதறடிந்த, — தேவர்சே னுபதி யொடுற்றிருந் தெனையாளி சிறுதே ருருட்டியருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே. (ரு)

போரொன்று வஞ்சமன வெஞ்சொற் கொடுந்தகுவர் புரமொன் றிரண்டுமொருதன், பொருவென்ற வஞ்செழுத் தோதுமவர் வினைநிலைமை போல்வதற் கேகுமருளால்,—வாரொன்று குங்குமக் கொங்கையந் திருமாது மனையடைத் துந்திறந்தும், வந்துலா வருவிரண் டாழியும் பொய்யாத வாய்மைநன் னெறி யந்தணர்,— நேரொன்று நெஞ்சவஞ் சாலைதனி லகலாது நிற்குமா வீரிரண்டு, நிரையிதழ்த் தாமரைத் தவிசினுறை யொருபாகு நிகழ்வுற்று மேவுறுபெருந், — தேரொன்று கொண்டவிறை யுளமகிழ வெம்மைய சிறுதே ருருட்டியருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே.()

குன்றலரு மருளாள னென்றமொழி நிற்குறிக் கொண்டுசெல் கின்றதெனவுங், குறித்தொருவர் பாலென்ற வளவிலம் மொழிசென்று கோவமுதி னேர்தலெனவு, — நன்றினிய பழமென்ற வளவினெட் டிலைவாழை நற்கனியி னெய்தலெனவு, நாடரும் பிள்ளையென் கின்றமொழி யாண்மகவி னண்ணுமா றெனவுமீச,— னென்றளவின் விடமெழுந் திடநடு நடுங்கிநிலை யின்றியிரி தருதேவரை, யெய்தாமன் மணிகண் டனைப்பொருந் துதலெனவு மிவணகர மென்பதுதனைச், — சென்றடையு மொருபெருங் கச்சிநக ராளிநீ சிறுதே ருருட்டியருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே.

## வேறு.

கருத்திற் காண்குறு நாடிகண் மூன்றையுங் கண்டுநன் னெடுநாடி, கலந்தி யங்குறு முயிர்க்கழி விலையெனக் காட்டிநோ

யினர்நெஞ்சர்,— திருத்திக் கைப்புவிட் டருமறைப் பாலொடு தீதிறப் பெருமுக்கட், டீஞ்சு வைக்கனி தன்னையுட் கொள்கெனத் தெருட்டுபு முனங்கூட்டு,— மருத்துப் பையினைச் சோதித்து வொண்பொடி மருந்தெடுத் துடல்பூசி, மணிய ணிந்தருளஞ்செழுத் தாகிய மந்திரம் பிறழாம,— லுரைத்திட் டோம்புறும் பவப்பிணி மருத்துவ னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. (சு)

வண்ட மிழ்ப்பெரும் புலவர்தஞ் செய்யுளின் வழுப்படாச் சொல்லோடும், வழுவ மைத்தசொற் புணர்த்திடு மாறெனவயங்கிள மதிசூடி,— தொண்டு பட்டிடு மயறபு நன்னெறித் தொழும்பின ரொடுகூடச், சுளிவு றுதடி யேன்றனைத் தழுவியே தொல்லிசைப் புலவோர்தர்,— தண்ட மிழ்த்தொடை புணர்க்கிலா முழுவழுத் தாழ்ந்தபுன் சொற்போலச், சங்க ரன்றிருத் தொண்டில்வேற் றுலகரைச் சார்வற வரைந்திட்ட,— வொண்ட ரைத்தனி முகமெனுங் கச்சிய னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. (எ)

வம்பு லாமலர்ப் பொழிலிடை யுடைந்துகு மாங்கனிச் சாறோடும், வண்டு ழுங்கடி மலர்முறுக் கவிழ்ந்துபெய் மதுப்பெயர்ப் பெருவெள்ள,— மம்பொன் மாமணிப் பூணிள முகிண்முலை யரிமதர் மழைக்கட்கே, ழரிச்சி லம்படி மாதரோடெழின்மத னுடுறு முதிர்வேனில்,— பம்பு வான்றிரை யாணர்த்தண் புனலெனப் பாய்ந்துபா லியாற்றோடிப், பரவை தன்கரு கிறந்திரிந் துப்பறப் பரந்துறும் விழவானு,— மும்பர் போற்றிசெய் காஞ்சிமா நகரின னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. (அ)

திலக வாணுதற் பவளவாய் மலைமக டிரண்முலைத் தடந்தோயுஞ், செஞ்ச டைப்பெரு மான்வினை யாட்டயர் செழும

லர்ப் பொழிற்கூடற்,— பலகை மீதுமுன் னுயர்த்துள செந்த மிழ்ப் பழமலர்த் தொடைவீழ்ந்து, படிந்தெ ழாதிருந் துறு பொருட் சுவைநுரப் பருகுறு பெருங்கல்விப்,— புலவர் தாய் மன மெனுங்களி வண்டினம் புக்கிருந் தொருங்குண்ணப், புனைந்த விக்கொடுந் தமிழ்ப்புகர்ச் செம்மொழிப் புதுமலர்த் தொடையார,— மூலகெ லாம்புகழ் திண்புயத் தணிபவ னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. (௯)

வந்து நம்புகழ் பாடுநர் தமையெலா மருவுடம் பிறுதிக் கண், மாசற் றெங்கணு நிறைசிவ மாக்கியே வைத்திடுஞ் செயலன்றி,— நந்து இன்றவோர் பதத்தினுண் மறுமையி னணுகுறும் படியுய்த்த, னமக்க டாதென விம்மையே வண்டிமிர் நனைகவுட் பகையாற்றல்,— சிந்தும் வன்மருப் பெறுழ்வலிப் புகர்முகச் சிறுவிழிப் பெருவேழச், செல்வ விந்திர னுக்குத லுடையவண் செழுமணித் தரளங்க,— ளுந்தும் வெள்ளரு வித்திருமயிலைய னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. (௧0)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

---

பிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

---

உ

கணபதி துணை.

# ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகர்

# கலம்பகம்.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

சித்திதருங் கச்சிச் சிவஞான தேசிகன்மேற்
பத்திதரும் பல்வகைய பாட்டுதவு - மத்தி
யலங்கலா வானை யடுத்தபிடி யீன்ற
விலங்கலா வானை விரைந்து.

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

நீர்தாங்கு சடாமவுலி நெடுங்கயிலைக் கிரியாகப்
பார்தாங்கு வரையெல்லாம் பனிக்கலைவெண் மதியாகக்
காய்கதிர்மான் றேரிரவி கடலமுதந் தானாகப்
பாய்திரைவார் கடல்யாவும் பண்ணவர்கோன் பகடாக
ஞாலத்த களிறனைத்து நகைமணிப்பாம் பிறையாக
வாலத்த பணிமுழுது மாக்குபெரும் புகழுடையோய்!.

இது ஆறடித்தரவு.

தன்னிலையு மெதிர்காட்டாத் தமமாகு மாணவநோய்
நின்னையல தெஞ்ஞான்று நீங்குவது தானன்றே
துன்னிருள்வாய் முழங்குதிரைச் சுடுட்டுகடன் முகட்டெழுந்த
மன்னுகதி ராலன்றி மற்றொன்றான் மாயுமோ.

தத்துவமாங் திரையெழுந்த தனிமாயைப் பெருங்கடலுள்
மெய்த்ததாட் புணையன்றி வேறொன்றாற் கடப்பரிதே
மைத்திரைவார் கடலியன்ற மரக்கலங்கொண் டன்றுபோ
யித்தரைவாழ் மனிதர்கடங் தேறுவதற் கொன்றுண்டோ.

பழியிலா வறங்கள்பல பயின்றாலு முன்றிருவாய்
மொழியினா லன்றிவான் முத்திநிலை கிடையாதே
விழியினா லலதுலகின் மேவுமுருப் பிறிதுபொறி
வழியினா லெதிர்காணு மனிதர்தா முளர்கொலோ.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

கொடுமிடி கெடவரு கொடைபடு நடையினை
சடையொடு நதிபணி தவழ்மதி யொருவினை.

மறையறை முறையற மறமற வருளினை
பொறிநெறி மறுகுறு புலனிலை யலகிலை.

யரிகரி பகையிகு மணிமணி மயிலையை
வரியரி மதர்விழி மலைமக ணகரினை.

இவைமூன்றும் ஈரடியராகம்.

முன்னாளி லொருஞான முலையயின்ற வாரமுத
மெந்நாளு முண்டின்று யாரோநின் னளவறிவார்.
நவத்தமிழ்வே தம்புகலு நன்மொழியிங் குண்மைபெறத்
தவத்தொடுதா னஞ்செயுமோர் தன்மையுனக் கலதுண்டோ.
மெய்யிலே பொய்தோன்றி மெய்யாக மயக்குறுமப்
பொய்யிலே பொய்தோன்றப் புகலுமுனைப் புகல்வார்யார்.
இருப்பம்பு பட்டுருவ வெய்தாலுந் தளராமற்
கருப்பம்பு படாவண்ணங் காப்பவர்க்குத் துணைநீயே.
கருமேனி யொழிந்தடியேங் கதிகாண நீயருளாற்
திருமேனி கொண்டிருந்து செய்ந்நன்றி மறப்பேமோ.

தவப்பிணிக்கு மூலமலர் தான்மூல மாய்க்கிளைக்கும்
பவப்பிணிக்கு மருந்துனது பார்வையே தானன்றே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

மாத மாற்று நீ, போத மாற்று நீ,
வாய்மை யாக்கு நீ, தீமை போக்கு நீ.

இவைநான்கும் முச்சீரோரடி யம்போதரங்கம்.

வசைகெ டுத்தனை, யிசைகொ டுத்தனை,
செயலொ ழித்தனை, மயல ழித்தனை,
யறம்வி ரித்தனை, மறமி ரித்தனை,
விழைவ றுத்தனை, பிழைபொ றுத்தனை,

இவையெட்டும் இருசீரோரடி யம்போதரங்கம்.

எனவாங்கு - இது தனிச்சொல்.

நாவலர் புகழ்சிவ ஞான தேசிக
வெவ்வ மகன்ற சைவ நாயக
நின்னடிக் கமல நெஞ்சுற விருத்தி
நறுமலர் தூவி நாடொறும் பரவுதூஉஞ்
செல்வச் செருக்கிற் செவிடுபட் டிருக்குங்
காதிற் றீம்பால் கமர்கவிழ்த் தாங்கு
பாப்பல பன்முறை பாடிநின் னைப்
பாடா மாந்தர் பக்கற்
கூடா வடியரிற் கூட்டுக வெனவே.

இது ஒன்பதடி நேரிசை யாசிரியச்சுரிதகம். (௧)

## நேரிசைவெண்பா.

வேவ மலரும் விழிகரந்த நின்னைமதன்
றேவ சிவஞான தேசிகா—மேவிலனென்
னுள்ள மறிந்த வொருநின் திருமேனிக்
கள்ள மறிந்தனனென் கண்டு. (௨)

### கட்டளைக்கலித்துறை.

கண்டே னறிவெனு மொண்சுட ரேற்றிக் கருத்தகன்மெய்த்
தண்டேயு மன்புநெய் பெய்துபோய் வாதந் தடுத்தொளிரக்
கொண்டே மலவிரு ளெல்லாந் துரந்தெங் குடிமுழுதுந்
தொண்டே யெனுமெய்ச் சிவஞான தேவன் றுணையடியே.

### பதினன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடிமலர் சிவப்ப நடந்துள முனிந்த வணங்கினைக் கூட்டு தல் வேண்டா, வடியனேன் றமிழ்க்குக் கலந்துட னிருந்த வரி வையைப் பிரிவுசெய் திடுக,— மிடிமலி வறிய செங்கல் பொன் னாக்கி வியப்புற வுதவுதல் வேண்டா, வெங்தெரி பசும்பொன் செங்கலாக் குகநீ வேறுனை வேண்டுவ தில்லையே,—பொடிமறை தழல்போ லிருந்துல கினர்கட் புலப்படா னுயர்சிவ ஞானி,புவி யிலென் றிருப்ப வனையன்யா னென்று பொங்கொளி யிரவி போற் றோன்றிக்,— கழ்நக ரவற்றுஞ் சிறந்தபொற் புரிசைக் காஞ்சியிற் போந்தகற் பகமே, கதிர்மணி வரன்றி யருவிவந் திழியுங் கயிலைநேர் மயிலைகா வலனே. (ச)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வலந்திரி கதிர்கா னுலகின ரெல்லாம் வந்துகேட் பனை விலை யெனுத, நலந்தரு மொருநீ தமியனேன் கேட்ப நானலை இல்லையெனத் திருவாய்,—மலர்ந்துளா செய்த தென்கொலோ வறியேன் மயிலைமால் வரைமணி விளக்கே, புலந்தெறு வீரர் பெருமவென் றிறைஞ்சிப் புகழ்சிவ ஞானதே சிகனே. (ரு)

### கலிவிருத்தம்.

சிகரியி னெழுதின மணியின் றோர்ப்பரிக்
இகலிர வுளதுகொ லிருவி னைத்தொடர்
நிகரறு நினையடை நிலையி னோர்க்கிலை
நகரியி னமர்சிவ ஞான தேவனே. (சு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவரு முனிவர் தாமுஞ் சித்தரு மற்றை யோரு
மேவரு நிலைய ராக வினையினேற் கருள்பு ரிந்தான்
மூவரு மிறைஞ்சு ஞான முதல்வனெண் மயிலை மேவி
யாவரும் விழையும் வான மிலான்புலம் பொழியு மாறே. (எ)

### மேற்படி வேறு.

மாறு செயுமைம் புலக்கணமே குணமே மயக்கு மாயையே, வேறு செயுமா ணவமலமே வினையே நுந்தம் விறல்காட்டித், தேறு செயுநஞ் சிவஞான தேவ னெதிர்நான் செல்வதன்முன், கூறு செயுநீர் செய்பவெலா மென்பாற் செய்து கொள்வீரோ. (அ)

### மேற்படி வேறு.

கொள்ளும் வன்பவப் பிணியின ராகிய குவலயத் தவரெல்லா, மெள்ளும் வெந்துயர்ப் பவப்பிணி மருத்துவ னெனப்படு சிவஞான, வள்ளல் வந்துவண் மயிலைமேல் வாழ்தலை மணிவிளக் கெனக்கண்டு, முள்ள நைந்துசென் றுரைக்கில னொன்கொலோ வுண்டுடுத் துழல்வாரே. (கூ)

### மறம். பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரா யரசன் றூதனென வந்த வொருவ யாமகள்தை, மலையை யுடைக்குஞ் சிவஞான வள்ளன் மயிலைக் குறவர்கா,— ணேரா ரெங்கள் குலமகளை யின்று கேட்ப நினைவிடுத்த, விறைவன் றிருக்கா ளத்தியிடை யெங்கண் மிச்சின் மிசைந்தவனாற்,— சீரா ரெயிறு தரளமெனச் சிதற வடிபட் டுழல்கின்றான், சிறிய குலத்திற் பிறந்தவனோ செந்தாண் மலராற் றேய்ப்புண்டு,— பாரா ரறிய வுடல்குன்றிப் பகற்போ தெல்லாம் புறப்படான், பழைய குடியிற் பிறந்தவனோ பகரா யுள்ளம் வெருவேலே. (கூ0)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேலுடையா னுமையிலை மலைமேவு சிவஞானி வினைக ளர்க்குங், காலுடையான் புகழோடு வெள்ளிமலை நிறைநிற்பக் கனம்போ தாமற், பாலுடையான் மிசைவைக்கப் பட்டததன் மேல்வைத்தோன் பால்வெண் ணிற்றுத், தோலுடையா னவன் மீது வைத்ததன்றோ விளமதியஞ் சொல்லுங் காலே. (கக)

### கலிநிலைத்துறை.

காலம் போயிற் றஞ்சன மன்ன கடாமீதி
லாலம் போல்வெங் காலனு மங்தோ வணுகுற்றான்
சீலங் கேண்மி னுய்யென வேநஞ் சிவஞானி
கோலங் காணுங் கொள்கை கருத்திற் குறியீரோ. (கஉ)

### கலிவிருத்தம்.

குறியுமிலை வடிவுமிலை குணமுமிலை யுரையாடவோர்
பொறியுமிலை மனமுமிலை புலனுமிலை யரிதாகநீ
செறியும்வகை யருள்செய்பொருள் சிவசமய குலதீபமாய்
மறியுமளி மலர்முரலு மயிலைவரு சிவஞானியே. (கங)

### நேரிசைவெண்பா.

ஞானிபெய ரேதேனு நன்மைதரு மென்னவுஞ்செம்
மேனிபுகல் வேதம் விதித்தபெய - ரான
சிவஞானி நாமஞ் சிவஞானி யென்று
னவஞானி யென்ப வவன். (கச)

### கட்டளைக்கலித்துறை.

அவனே யிவனென் றெனையாளு மண்ண லடியவர்தம்
பவநோ யகற்றுஞ் சிவஞான தேசிகன் பாரில்வருஞ்
சிவனே யிவனென் றுலகமெ லாந்தொழுந் தெய்வமன்றி
யவனே தமிய னிதயா லயத்தி லிருப்பவனே. (கரு)

## கலிவிருத்தம்.

இருந்த மேனியோ டிம்மை மறுமையிற்
பொருந்து போகம் புரிசிவ ஞானிநீ
விரும்பு வார்கட் கெனக்கருண் மெய்விழைந்
தருந்து மாசை யிலாமையி லாசையே. (௧௬)

## மடக்கு. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆசை தனதாண் மூட்டினு னடித்திட் டமுத மூட்டினுன்
பாச விருளை யகற்றினுன் பதிசே ரறிவை யகற்றினுன்
றேசு மலியு மாகத்தன் சிவஞா னிப்பேர் மாகத்த
னேச மருவி மறியாரோ நிரயத் துயர மறியாரே. (௧௭)

## கட்டளைக்கலித்துறை.

மறிமறைத் தாலு மழுமறைத் தாலு மணிமிடற்றின்
குறிமறைத் தாலு மதிமறைத் தாலுமம் மன் கொன்றைமலர்
வெறிமறைத் தாலு மறிவே னுனைமதன் மேற்பகைமை
நெறிமறைத் தாயிலை யேசிவ ஞான நெடுந்தகையே. (௧௮)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெடுமடைக்கட் குடவளைசென் றடைப்பவிள வரானுழை ந்து நீர்செலுத்துந், தடமுடைத்தண் டணைமருதக் கச்சிநகர்ச் சிவஞானத் தம்பிரானே, படமுடிப்பார் மிசைநினது புகழ் பாடிப் பன்மலர்தூய்ப் பணிகின் றேற்குக், குடமுடைத்தா லெனப்பாசங் கெடுப்பதல்லா லெனக்குநீ கொடுப்பதென்னே.

## நேரிசைவெண்பா.

என்ன தவவுதவி யீந்தன் றுணர்கிலேன்
மன்னுசிவ ஞானமுனி வந்துற்றான் - றன்னேநிகர்
மாசங் கெடுக்கு மலர்த்தடஞ்சூழ் கச்சியிலெம்
பாசங் கெடுக்கும் படி. (௨௦)

## கட்டளைக்கலித்துறை.

படிக்குப் பெருஞ்செல்வ மாஞ்சிவ ஞானிமெய்ப் பத்தர் மணி, முடிக்குப் பெருஞ்செல்வ மாம்பதத் தாளொடு முன்னி யெங்கண், மிடிக்குப் பெருஞ்செல்வ மென்றில ரோதரை வேந்த ரொடெங், குடிக்குப் பெருஞ்செல்வ மென்றுசென் றோது றுங் கோளர்களே. (உக)

## கலிவிருத்தம்.

கோள்வலி செய்வதென் கொடிய வாகிய
நாள்வலி செய்வதெ னம்மைக் கூற்றெனு
மாள்வலி செய்வதெ னமுது பானிதன்
றாள்வலி யவைகொளுந் தண்டு தொண்டரோ. (உஉ)

## அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

தொண்டர்நெஞ்ச வஞ்சந் தொலைக்குஞ் சிவஞானி
யண்டரஞ்சும் வெள்ளிமலை யண்ணல்கா ணம்மானை
யண்டரஞ்சும் வெள்ளிமலை யண்ணலே யாமாகிற்
கண்டநஞ்சங் கண்டிலநங் கண்ணிணு லம்மானை
காணுே மயிலைவளாக் கண்டக்கா லம்மானை. (உரு)

## கலிவிருத்தம்.

அம்மா சிவஞா னியடிக் கமல
மும்மா யைகடந் துமுயங் குமது
சும்மா தலைமீது சுமத் தினளுற்
கைம்மா றுளதோ கடையே னிடையே. (உச)

## நேரிசைவெண்பா.

இடையினமே போல விரண்டறமு மல்லா
நடையினமே நாமயிலை ஞானி—புடையினமே
சார்வாகா தோடித் தடுமாறு கின்றமையாற்
றீர்வாகா மாயைச் செயல். (உரு)

### காலம், எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செயலெலா மறமாகச் செய்யுங் காலந் திகழ்வெலாம் பொய்யாகத் திகழுங்கால, மயலெலா முறவாகி யமையுங்கால மதிவெலாந் தனையறிய வணையுங்கால, மயலெலா மொழிக்துபரவசமாங்கால மனமெலாம் பேரன்பு மயமாங்கால, மியலெலாம் பிறப்பொழிய வெடுக்குங்கால மெங்கள்சிவ ஞானியருளிசையுங் காலம். (உக)

### கட்டளைக்கலித்துறை.

காலுண்டு வாழு முனிவரு முள்ளங் கலங்குநஞ்ச
மேலுண்டு நஞ்சைய ளும்பழி மாறவெல் வீரவனை
மாலுண் டுமிழு முலகமெ லாஞ்சொன் மயிலைவெற்பிற்
பாலுண்டு பாலைய னென்றிருந் தாய்கொலெம் பாலையனே. ()

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐய மயிலைச் சிவஞானி யந்தோ நம்மாற் செயப்பட்ட
வுய்ய வரிய பாதகங்கட் கொழிக்கு முபாய மிலையென்று
வையு மனிதர் நினதுதிரு நாமத்தெழுவா யெழுத்திரண்டும்
பைய வொருகா லியம்பியுய்யப் பற்றார் துயரி னுற்றாரோ. ()

### கலிவிருத்தம்.

உற்பவ நிற்ப தொடுக்க மளிக்குஞ்
சிற்பரன் மெய்ச்சிவ ஞானி திருக்கை
நற்பிர சாத மலர்ப்பத நம்பாற்
சொற்பெறு மூவர் தொழிற்புண ராவே. (உசு)

### கட்டளைக்கலித்துறை.

வேதந் தெளிந்தநின் செவ்வாய் மொழிநின் விரைமலர்ப்பூம்
பாதம் படுதுக ளெங்குல தேவதை பார்வையெங்கள்
சாதங் களையு மருந்துநின் னாமந் தனிக்குடிலை
நாதன் கயிலை சிவஞானி நீயமர் நல்லிடமே. (௩௦)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நல்ல புலவர் பழிச்சுசிவ ஞானி யெனுமோர் நாமமுறு, மல்லன் மயிலை மலையனைவே றொருவனாக மதிக்கிலேன், மெல்ல வொருபூ வீசுதன்முன் வேளை யெரித்த தான்வெகுளி, யில்ல னெனினும் பொறையுளன்போற் றோன்று னெனினும் யான்றானே. (நக)

### நேரிசை வெண்பா.

யானென தென்னு மிவைகழன்று வந்துசிவ
ஞான குருவை நணுகிலா—மானுடர்தம்
பொல்லாப் பிறவிநோய் போமோ வரினுநிலத்
தெல்லர்க் கடவுளரு மின்று. (நஉ)

### வண்டுவிடுதூது. இன்னிசைக்கோச்சகக்கலிப்பா.

இன்றுபிழை யொன்று மியற்றா வெனை முனிந்து
நின்று சிறிதுமரு ணெஞ்சுறா வின்மதனைக்
கொன்றுவிடு வில்லைக் கொலைப்பாவ மென்றளிகாள்
சென்றுபுக லீர்நஞ் சிவஞான தேசிகர்க்கே. (நந)

### கலிவிருத்தம்.

கேடு தீர்மயி லைக்கிரி ஞானியைத்
தேடு வார்சிலர் செய்யுங் கருமியை
நாடு வார்பலர் நன்மணி யோசடைக்
கோடு வீழ்மணி யோபலர் கொள்வதே. (நச)

### சித்து. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளிபோன் மணித்தலைநா கங்கிடக்கு மயிலைமலைக் குகையில் வாழுந், தெள்ளுவா னமுதனைய சிவஞான பதம்பரவுஞ் சித்தர்நாங்கா, ணள்ளியோர் பிடிசோறு தரிற்பத்தா நாமுனக்கிங் கைய மின்றி,வெள்ளிதான் வருவதன்முன்பொன்னாக்கு வோமிதுநம் வித்தை தானே. (நரு)

### நேரிசைவெண்பா.

வித்தை சிவஞானி வித்தையே காண்பவெலா
மித்தையென நின்று விளம்பியே—சத்தியமாய்
நாட்டினு னீதானு நானே யெனப்புகன்று
காட்டினன் றன்னையே காண். (௬௬)

### ஊசல். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காண்டகைய விமிழிசைவெள் ளருவி தூங்குங் கவின்மயிலைச் சிவஞான தேவன் கூறு, மாண்டகுநன் மொழிகேளா வாவி பாவ வல்வினையு நல்வினையு நின்று தள்ள, மீண்டுதுயர் நிரயமொடு துறக்க மேவி மெலிவதிவ்வா றெனத்திரிந்து காட்டல் போலத், தூண்டுசுடர் விளக்கனையீ ரிரும ருங்குந் தோழியர்க ணின்றூட்ட வாடீ ரூசல். (௬எ)

### தாழிசை.

ஊசலாடு நெஞ்சொடும்பிட ருற்றவெற்றிகொள் காலனை, யுணர்ந்திலேன்பய மற்றுவேண்டிய துண்டுடுத்துழன் றேண்மலர்,—வாசமார்குழல் மாதரார்செயு மாலின்மூழ்கின னத்துயர், மாறுமாறுநி னைந்திலேனெரி வாய்தலிற்படு மனையின்வாய், — தூசுலாமணை மீதுவாள்விழி துஞ்சவீழ்பவர் போலவே, தொண்டர்தந்துயர் கண்டிராதுது டைக்குறுஞ்சிவ ஞானிநீ, — யாசுதீருண் மிகுதிகாணிய வஞ்சலென்றருள் செய்தியோ, வருண்மறைத்துவி டுத்தியோசொ லறிந்திலேன் றிரு வுள்ளமே. (௬அ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உள்ளதன் பொருள ளிக்கு முயர்சிவ ஞான தேவன்
றெள்ளும்வண் புகழுங் காமற் றெறுபிர தாப முந்தாம்
வெள்ளைநன் மதியுஞ் செங்கேழ் வெய்யவன் றானு மாகி
யெள்ளவந் தெதிர்வ துண்டோ வெனவெழுந் துலாவு மன்றே.

### மேற்படி வேறு.

அன்றெடுத்து மலைகுழைத்துப் புரமெரித்த புகழல்லா லளற்ரும் வேனை, நின்றெடுத்து மனங்குழைத்து வினையிரித்த நின்புகழை நிகழ்த்தல் செய்யார், குன்றெடுத்த புகழிருப்பச் சிறுசிலையொன் றெடுத்தபுகழ் கூறல் போன்மான், கன்றெடுத்த கரமறைத்துச் சிவஞானிப் பெயர்படைத்த கருணைக் குன்றே. (சC)

### தவம். கட்டளைக்கலித்துறை.

குன்ரு மறையுள் விபூதியென் றேசொலுங் கூற்றினுக்குப்
பொன்ருத செல்வ மெனப்பொருள் கூறும்வன் பூசுரருந்
தன்ரு மறைமலர்க் கைந்நீறு சாற்றத் தவம்புரிவ
ரொன்ரு லெவர்சிவ ஞானிதன் மேன்மை யிசைப்பவரோ. (சக)

### புயவகுப்பு.

இசைபோகி மாழ்கமத னம்பைக் கடிந்தன
வினாக வீருரியொ டென்பைத் துரந்தன
வசைபோகு மாரநிகர் கண்டிக் கிசைந்தன
மகமேரு வாதிவரை யஞ்சக் கிளர்ந்தன
நசைபோகு மாதவர்க டுன்பைத் துரந்தன
நயநீறு தேய்வையென விஞ்சத் திமிர்ந்தன
திசைபோகு தூயதமிழ் தங்கப் புனைந்தன
சிவஞான தேசிகர்தம் வென்றிப் புயங்களே. (சஉ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புயன்மறையா மயிலைமலைச் சிவஞானி நீயேயெம் பொருளிற் கொண்ட, செயன்மறையா விளவேறு கரந்தவன்யானலனென்னிற் றெளியச் சொல்வே, மயன்மறையா நின்னடிகண் டனமார வாரங்க ளாகா துன்ற, னியன்மறையா துரைசெய்தி செய்திலையே லலர்தூற்ற விளைக்கி லேமே. (சங)

## மேற்படி வேறு.

இளைக்கு மிடியற் குறுபொருளா மிறைவற் கரசாங் கூற்றுவனை, விளிக்கும் பிணிக்கு மருந்தாகும் விடத்திற் கருஞ்சீர்க் கலுழனும், வளைக்கும் பகைக்குப் படையாகு மலடர்க் கரியமகவாகுந், திளைக்குங் கருணைச் சிவஞான தேவன் றிருக்கைத் திருநீறே. (சச)

## நேரிசைவெண்பா.

நீறுவாய் கோலநினை நெஞ்சமே நெஞ்சமவற்
கூறுநா வேமாற்றங் கூறுநா - பாறுவீழ்
வேல்பிடிக்குஞ் செவ்வேள் வியன்மயிலை ஞானிமலர்க்
கால்பிடிக்குங் கைகளே கை. (சரு)

## நேரிசையாசிரியப்பா.

கைகமழ் நறிய கறியொடு பகூஉ
மென்மைவெள் ளடிசி லின்மை மாந்தி
விலைவரம் பறியா மென்றுகி லின்மை
நாடொறு முடுத்து நகைமணிப் பசும்பொற்
பூண்டன தின்மை காண்டகப் புனைந்து
திண்குற டுரிஞ்சுஞ் செழுஞ்சாந் தின்மை
பூசிப் பொன்மலி புரிசை மாடத்
தின்மையின் மலர்ப்பூம் பள்ளி யின்மையிற்
கருங்கட் செவ்வாய் வெண்ணகைப் பசுந்தொடி
யிளமுலை மாத ரின்மையொடு தழீஇ
வாழா நின்றநின் வண்புகழ் பாடு
நல்லிசைப் புலவர் நற்பொரு ளின்மை
கண்டது பொருது கவலைகூர் தழிக்கு
நின்னை யென்றே நிலமிசை மாந்த
ரழுக்கா றிலனென வழுக்கா தறைகுவர்
தவப்பல விடர்செய் பவப்பிணி மருத்துவ

கலங்குறு தன்மைப் புலந்தெறு வீர
வடியார் கொள்ள மிடியாச் செல்வ
நானிலம் புகழ்சிவ ஞானதேவ
வடியே மருளா தறிதரக் கூறுதி
யென்றவன் றனையே யாம்வினு யறிகுது
* நங்கண் களிப்ப நண்ணு மாயி
னணியென விறங்குவெள் ளருவி
மணிமலி மயிலை மலைகிழ வோனே. (சகூ)

## கட்டளைக்கலித்துறை.

இழவி யெனுமிக் கிரிராச கன்னிகை கெண்டையங்க
ணழவி மலனைத் தழூஉ ரமர்ந்த வமுதமுனி
தொழவி கலமி லுயர்ஞானங் கூறுஞ் சுடரிலைவேற்
குழவி தனினு முனையே விரும்புங் குடமுனியே. (சஎ)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடக்கெனப் படாக் குணக்குங் குணக்கெனப் படாக்குடக்கும்
வடக்கெனப் படாத தெற்குந் தெற்கெனப் படாவ டக்கு
நடக்குமெய்ப் புகழ்மா கச்சி நகர்ச்சிவ ஞான தேவே
படைக்குமப் பெரியோன் றன்னைப் பரவுவார் பரவுவாரோ. ()

## பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரம யோகி யென்றுடம்பிற் பாதி யொருத்தி கொளக்
கொடுத்துப், பகர்வுற் றறநன் மகனையடும் பாத கத்திற் குடன்
படுத்தித்,— தருமி தானென் றெருதேறிச் சாந்த னென்று
புரமெரித்துத், தம்பி ரானென் றொருவற்குச் சந்து மகளிர்
பானடந்து, பெருமை யாள னென்றுபோய்ப் பேய்க்கூத்

---

* இப்பிரபந்தம் ஆசிரிய ரயிக்கமுற்ற பின்னர் அருளிச் செய்ததாகலின் "நங்கண்களிப்ப நண்ணுமாயின் யாம் விஞயறிகுதும்" என்று ஆற்றுமையால் விதந்துரைக்கப் பட்டது.

தாடிச் சின்மயனும், பெயர்பெற் றவையி னம்பியாற் பித்த னுகிப் புனிதனெனுச்,—சிரமு மாலை யென்புமரீஇத் திரிந்த முரண்கொள் செயலெல்லாந், தீர்வான் வந்த சிவஞான தேவற் கிலையொப் பாவாரே. (சகூ)

## பதினுன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரியங் கரையீர் வாளிலைக் கைதை மலரெனத் தோன் றுவர் சிலர்தா, மதுரவீர்ங் கரும்பின் மலரெனச் சிலர்தாம் வருவர்நீ கற்பக மலர்போற்,—காரியங் களத்த னடஞ்செய்தா மரையின் கழலொலி யாவுமூர் போகி, கண்களாற் கண்டு கேட்குமூர்ப் பச்சைக் கந்தமா முனிகரத் துதித்தாய்,—வேரி யங் கமலத் தாளிழை மருங்குன் மெல்லியற் பெண்ணெரு கம்ப, மேவுற விருமா தங்கமுங் கட்டி விடாதமர் நகர்களு யகமும்,—பாரினன் முகமா மிக்கரை முனிந்த பரன்றிரு வக்கரை நகரும், பயிலிட மெனக்கொண் மயிலைவா ழமுத பான மார் ஞானமா தவனே. (ருo)

## கட்டளைக்கலித்துறை.

தடங்கட னீர்முகந் தாங்குப் பொழியினுந் தண்விசும்பு
நெடுங்கட னீர்மை பெறல்போல வேதங்க ணீறுதொட்டு
நடுங்கிடு மாறில் சிவஞான தேசிக னல்கினுமோர்
ப்டங்கிடைட் ஞால முடையார் பெறுகுவர் பாக்கியமே. (ருக)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாக்கியமும் பாலுமுமை புகட்டியமெய்ஞ் ஞானப் பாலனீ யளவிறந்த சிவபெருமா னடியார்க், காக்கியிடல் கருதியே யுரு த்திரபல் கணத்தார்க் கட்டிட்டல் காணுதே போதியோ வென த்தன், றூக்கினிடை யுரைசெய்தா னென்றேயென் றனக்குத் தோன்றுகின்ற தலகில்வே றெருருவரிலா மையினுற், சீர்க்கவி ஞர் புகழ்மயிலை மால்வரையின் விளக்கே சிவஞான தேவனே னச் சிறந்தவருட் கடலே. (ருஉ)

### நேரிசைவெண்பா.

கடலுலக மேத்துங் கருணைமலை மாயை
கடலை தபுமயிலை ஞானி—விடலரிய
நல்வினத்தை நண்ணு நணுகுமுட லாமுதலூர்
மெல்லினத்து ளாதிநிலை மெய். (ருங)

### கலி. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெய்த்தவறு சமயங்கட் கிறைவ னாகி விளங்குசிவ ஞான குரு வாம மென்னுஞ், சத்திசம யத்தினுக்குக் கள்ளூ மூனுந் தருமெனமான் மதுகைவிடா னாகி நின்றான், புத்தலரி யயன் கரகங் கொண்டு வந்தான் புராரியுழை யைங்கரன்பே ரொலி கைக் கொண்டார், கெய்த்தவடி வேன்முருகன் சேவல் கொ ண்டா னிலவினனோர் முயன்முழுதும் விழுங்கி னானே. (ருச)

### தழை. கலிநிலைத்துறை.

விழுங்குவள் போலது கொண்டர லோதியின் மேல்வைத்தா
ளழுந்துற வாள்விழி யொத்தின டேமொழி யன்பாகின்
செழுந்தழை பட்டது நஞ்சிவ ஞானி திருத்தாள்கள்
பழம்படு கெஞ்சுடை யார்கரம் வந்து படும்பாடே. (ருரு)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாடு வாரிசை யறியு மியாவுமூர் பணியு நல்லிய லம்பலத் துனின், றாடு வாரறி வார்கொ லோவறி யார்கொ லோவெனப் பாடு வார்கொளத், தோடு வார்செவி நல்கி னுயர் சூலி நஞ் சிவ ஞானி நீபடை, வீடு வார்செவி யாக நல்கினை விலகி நல்லி யற் புலவர் கொள்ளவே. (ருசு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளு மூண்டி பகுத்துண்டு பெருஞ்சீர் கொண்டா னின்குரவன், கள்ளூம் வண்டு மறுமலர்ப்பூம் புலியூர்ப் பச்சைக்

கந்தமுனி, தெள்ளு மிருஞ்சீர் நீபகுத்திட் டுண்ணு துற்முய்சிவ ஞானி, துள்ளு மருந்தா யினுங்கன்று சொல்லாரோசொ னல்லாரோ. (ருஎ)

கட்டளைக்கலித்துறை.

நல்லா ரவன்சொல்வ தெல்லாம்பொய் யென்பவர் நன்மையிலாப், பொல்லா ரவனைமெய் யாளனென் பார்மெய்ப் பொருளுணர்ந்த, வல்லார் மயிலைச் சிவஞானி யைச்சொல வாய்திறவார், கல்லா ரவனியல் சொல்வமென் றேபல கற்றவரோ. ()

கலிவிருத்தம்.

கற்றுவேத முற்றுமாயை கழலுமீச னேபதி
சொற்றசைவர் கட்கெனச்சொல் சொல்லுமாவி யேபர
முற்றும்வைதி கர்க்கெனச்சொன் மொழியுமாறு மாறுநா
முற்றமயிலை ஞானதேவ னெருசொ லுண்மை சொல்லவே. ()

தாழிசை.

சொல்லருங்கயி லைத்தணந்தனை துன்னுநீவிட குணமூர், சுடல்செய்சாபமு மின்றியேசம ஞெக்கமெய்தினை தோலுடை,—பல்லெலும்பணி கோலமோவினை பாதியாணெனன் மாறினை, பணிகள்யாவுமு ருதகன்றனை பாணிசென்னிசு மக்கிலை,—வில்லிருந்தத ழும்பொழிந்தனை மீளநஞ்சமி ரிந்தனை, விரைந்து சோறிடு மனையைநல்கென வேண்டுமாறு மறந்தனை,—கொல்விரும்பர சினைவிடுத்தனை குரைவிலாமதி மேவினை, கோதறுஞ்சிவ ஞானியேயருள் கூருஞானவி நோதனே.

கட்டளைக்கலித்துறை.

வினையே னெனினுங் கொடியே னெனினும் விதிவிலக்கு
தினையே னெனினு மியானே யறங்களி னின்றுடையே
னனையே யனைய சிவஞான தேவ னருண்மிகுதி
யெனையே யடைதலி னுலைய மேது மிதற்கிலையே. (சுக)

### நேரிசைவெண்பா.

இல்லாமை யில்லாமை யெய்தலா நூன்முழுதுங்
கல்லாமை கல்லாமை கற்கலாம் - வல்லான்
சிவஞான தேவன் றிருவடியைப் போற்றத்
தவஞான முண்டாயிற் றான். (சுஉ)

### வஞ்சித்துறை.

தானி யேசிவ, ஞானி யேயெனுன்
மேனி யோடபி, மானி யாகுமே. (சுஙு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேவரு மெய்ச்சிவ ஞானி திருப்புகழ் மேன்மை யிசைத்திடுநாண், மாவுரகர்க்கிறை தாஞெளிர் பைத்தலை மாண வசைக்குமதாற், பூவசை வுற்றிடு மாலென மட்டவிழ் பூமிசை யுற்றிடுவான், பாவின் வியப்புறு மேரு முதற்கிரி பார மியற்றினனே.

### நேரிசைவெண்பா.

பாரார் விசும்புளார் பாதாளத் தார்பரவுஞ்
சீரார் சிவஞான தேசிகா - தீரா
வறவா நினைக்கி னடியேன் பொருட்டுப்
பிறவா நினக்குப் பிறப்பு. (சுரு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிறந்தான் மேலு மிடிதீர்நோய் தீரென் றெமைப்பின் ருெடர்வனென, வறிந்தாய் போலுஞ் செம்பவளத் திருவாய் மலர்ந்தென் னகந்திருத்தி, யிறந்தார் ஞால மிசைப்பிறவா முதுகுன் றகலா தெனைவைத்தாய், சிறந்தார் வாய்மைச் சிவஞானிப் பேரோய் தீராச் சீரோயே. (சுசு)

### நேரிசையாசிரியப்பா.

சீர்வளர் குவவுத் திண்டோண் மாருதி
யுயிர்தரு மருந்தொன் றுறுதற் பொருட்டு
முழுமணி கொழிக்கு முகங்கவி ழருவிக்

குன்றமொன் றெடுத்த கொள்கை போலச்
சொற்றிறம் விரித்த சுடர்மணிச் செழுஞ்சூட்
டுரக வேந்த னொருதலை தரிப்பக்
காதல் கூர்ந்து கண்ணகன் ஞால
முச்சிக் கொண்ட கச்சிப் பதியு
மெறும்பியுயிர் நீங்கி லெறும்பி யீருரி
போர்த்துப் போகும் புராதன மலையு
மான்பாற் கன்றி யளவில்பல் கறிக்கு
மின்சுவை விளையு மென்சே யூருங்
கயிலைபோற் சிறந்த மயிலைமால் வரையு
மிடங்கொண் டிருந்த வெங்க ளையக
னரன்றிருத் தொண்டர்க் கன்னை போல்வான்
புகழுநர்க் கடங்காப் புகழுடைப் பெருந்தகை
யுலகா யதனுக் கிலகா யுதமா
யணுமத மோரணு வாகத் துரந்து
விசேட மதத்தின் விசேட நீக்கிக்
காலவா திக்கோர் கால னாகிக்
குருமத னொய்தெனக் கூறி மாற்றிப்
பஞ்ச ராத்திரிக் கஞ்சு பகலாய்ச்
சைவப் பயிர்க்குத் தண்முகி லானோ
னுந்தொழ வருள்சிவ ஞான தேவன்
சமய வாதிக டம்மத திறுவத்
தகர்போல் வாதிற் றுக்குத னோக்கிச்
சிரித்துளங் களிக்குஞ் சிவாநு பூதியின்
மாண்டிட வெம்மை வைத்தனன்
வேண்டிய செய்கவவ் வீணர் தாமே. (சுஎ)

### பிச்சியார். கலிநிலைத்துறை.

தாமே மனிதர் தமதா மயிலைத் தனிஞானி
பூமேன் மனிதக் கோல மடைந்து புறப்பட்டான்

மாமேன் மையரா இயமா தவர்தவம் வௌவற்குக்
கோமே தகமே நீதவ வேடங் கொண்டாயே. (சுஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டசிலை மரமுதலா யினதமைத்தாஞ் சிவமெனவே குறிக்க மாட்டார், ரண்டர்முத லாயினோர் பாவிக்கப் படுமயிலை யமர்ந்திட் டெம்மைத், தொண்டுகொளுஞ் சிவஞானி தனைத் தானே சிவோகமெனத் துணிந்து கொண்டு, பண்டைநரர் பவ முழுதுந் தொலைத்திடுவ னியாரதிகம் பார்த்திடரோ. (சுகூ)

பாண். நேரிசைவெண்பா.

பார்த்திடுவ னிலகண்ட பாணனு ராகநினைத்
தீர்த்தன் சிவஞான தேசிகன்சீ - ரேத்திவரிற்
பாணு நினைச்சாதி பாராட்டு வேன்பிறர்சீர்
நாணு துரைத்துறலா னன். (எ0)

கட்டளைக்கலித்துறை.

நானே சசிவன் னனிற்பெரி யேனவன் ஞானிதனைத்
தானே யடைந்தில ளுன்றிருக் காஞ்சியிற் றண்மலர்ப்பூந்
தேனே யனைய சிவஞான தேவனைச் சேர்ந்திமைப்பி
லூனே யுயிரே யெனுமிவை வேறுபட் டுய்ந்தனனே. (எக)

நேரிசைவெண்பா.

உன்னைச் சிறையிட் டுளானெஞ் சிவஞானி
தன்னைப் பணிவினவித் தான்செய்வ - னென்னைப்
படைப்பேன் கிடைப்பேனென் றெண்ணுதே பாழி
யடைப்பேன் கமலா லயா. (எஉ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆலய மெனக்கொண் டெம்மனத் தமர்ந்த வருட்சிவ ஞானதே சிகவெம், பாலைய மலர்க்கண் ணிரண்டுடை யாய்க் குப் பார்வைமூன் றுளனெனப் படுவோன், மேலவ னென்னி

லவற்குநா லிருகண் விண்ணவ னுயர்ந்தவ னவற்குச், சாலவு
மதிக னுவனு யிரங்கட் டவளமார் கவளவா ரணனே. (எங)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வார ணுசி சிதம்பர மங்கல மாதை வீழிபுகார்
சீர ணுமலை யம்பர் வலஞ்சுழி சேது மாதவனூ
ராரு ணுடவி நின்பத பங்கய மாகும் வேறறியே
னார ணுதி வணங்கு மருஞ்சிவ ஞான தேசிகனே. (எச)

## தாழிசை.

தேசுலாவுமணி நாகமீரமதி தேய்வகன்றுவளர் மோவெ
ணு, வாசையோடமரும் வேணிநாதனரு ளாளனெந்தைபுகழ்
காழிவாழ், பாசநாசனெனு ஞானமாமதலை பாடவென்புமக
ளாகுநான், மாசிலாதசிவ ஞானிசீர்பரவ மாதரென்புவடி
வாவரோ. (எரு)

## மதங்கு. மேற்படி வேறு.

ஆகுமேயிவள் வலிபிறர்க் காவிபோமுடல் போலவே
மோக மாதரின் மாறிய முதல்வணஞ்சிவ ஞானிசீர்
பாகு போன்மொழி யான்மிகப் பாடியாடிம தங்கிதான்
சோகமேதுமின் முனிவர்தந் துறவு கொள்ளைகொள் கிற்பளே.

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பகலாவெழுத் தைந்தேவடி வாகுஞ்சிவ ஞானி பாற்போ
குவ னென்றேநினை வுற்றேனது பொழுதே, புகலாசையி ரும்
பேயினிப் போவேனெனப் போய்த்தாற் புணர்மூலம லப்பே
யவற் கண்டேகுவ னென்றே, யகலாமைய கன்றேயக லாநின்
றது மெல்ல வாகத்தின்வி னைப்பேயவற் கண்டுஞ்சில நாணு,
ணிகலாமையி ருந்தேகுவ னெனநின்றது மாயை யெனும்பே
யத ேனுடேகுவ னெனநைந்தநி ரந்தே. (எஎ)

### வஞ்சிவிருத்தம்.

இரந்து நிற்றலி லாமையுங்
கரந்து நிற்றல்க லாமையும்
பொருந்து நிற்புகழ் வேணியான்
றிருந்து மெய்ச்சிவ ஞானியே. (எஅ)

### நேரிசைவெண்பா.

ஞானியஞ் ஞானியெனல் ஞானசம் பந்தனெனுந்
தானிமணப் பந்தற்குத் தப்பியுமன்—மானுடர்கா
ணில்லாமல் வம்பினே நின்றசிவ ஞானிபத
மெல்லாம் வழங்குகின்ற னின்று. (எகூ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்றுவர்வாய் மகளிர்மய லுறுதென்று மெனைத்தடுத்தா ணிசையக் கொண்டாய், வென்றிமலி துறவியா தலினீயம் மா தொருபால் விழைந்து வைத்தோன்,மூன்றமர்செய் மணம்விலக்கி வலிந்தாட்கொண் டிருமாதர் மோக வேலை, யன்றமிழ நம்பியைச்செய் தனன்சிவஞா னிப்பெரும்பே ரடைந்துளோயே.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடையாத புல்ல ரினமோ டிணங்க வடியேனை விட்ட வொருநீ, கிடையாத நின்னை யுறுமன்பர் தங்கள் கிளையோ டிணங்க வருள்வாய், திடையாக நாளி னடியான் முனிந்த சிவ ஞான தேவ மதியைச், சடையா லணிந்த வவன்வேறி யார்கொ றலைவா வெனக்கு மொழியே. (அக)

### கட்டளைக்கலித்துறை.

எனக்குப் பிறப்பில்லை யென்றேகனன்மழு வேந்துவன்யா, னினக்குக் கருணையென் மேற்று தலினின் னிலைமை கண்டே, யெனக்குப் பிறப்புண்டென் பார்சிவ ஞானி யிருநிலத்தி, னினக் குப் பிறப்புண்டென் பாரல ரோவவர் நிந்தைசெய்தே. (அஉ)

### சம்பிரதம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிந்தையறும் படிமுழுது மளப்பம் வாங்கி நெடுவனை யொன் றெடுப்பமெழு கடலை யள்ளிச், சிந்துவமல் லியினலரி யாக்க வல்லோஞ் செய்குவமென் றயன்போனுற் றிசையும் பாரோந், தந்தையினு மினியசிவ ஞான தேவன் றன்கருணை கொண்டெளிதிற் றருக்கர் கூறு, மைந்தனுவி லோரணுவு ளண்ட முண்ட வம்புகொளுஞ் சம்புவைநா மடக்கு வோமே. (அரு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடங்க வெலும்புந் தோலுமா யருவ ருத்திட் டமிழ்கின்ற, வுடம்பை நானென் றிருந்தேனை யொழிவில் கருணைச் சிவஞானி, கடந்த பிரம நீயெனவே கழற்கா லென்புன் றலை வைத்தான், முடங்கு சுருள்வா ளுய்க்கொருபொன் முடிசூட் டினனெம் பெருமானே. (அச)

### தாவுகோச்சகக்கலிப்பா.

பெருமானே சிவஞானிப் பெயருடையோய் நினதருளால்
வருமான்மா பரமுத்தி மருவுதலே யியல்பாகும்
பரமான்மா வுரைசெய்யப் படுகாசி முதலனதாந்
தருமாறோ ருபசாரந் தருவதுநிற் கிடைத்திடினே. (அரு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கிடைப்பரிய நீதுறந்த கங்கைதிருப் பாற்கடலாய்க் கிடந்த தாங்குச், சடைப்பழகு மனந்தனத னெடுபோகச் சயன மெனச் சார்ந்தான் மாயன், படப்பணியை நீங்குதலால் வளர்ந்துபோ யிற்றுமதி பாணி மானை, விடுப்பவத னுடல்பு குந்து துரியசிவ ஞானியென விளங்கு வோயே. (அசு)

### கட்டளைக்கலித்துறை.

விளங்காத வண்ணம் பிறர்தீங் கடக்கி விரித்துநன்மை
யுளங்காதல் செய்துறைப் பார்கூ றுதற்கிங் கொருகடுகி

விளங்கா மூளவு நலமில ளுகிய வென்னையென்றே
துளங்கா தருளச் சிவஞான தேவன் றொடங்கினனே. (அஎ)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொடங்கியா யிரநாவால் யோக மெல்லாஞ்
சொல்லினுநீ போகியெனப் படுவாய் மண்ணை
விடும்பரிசு நினக்கில்லை பணம்போ மாயின்
வீந்திடுவை விரைகமழ்மென் மலர்க்கட் பெம்மான்
முடங்குறினு நினைவிடுமோ வளியுள் வாங்கு
முயற்சியரல் யோகியெனப் படாய னந்தா
வடைந்தசிவ ஞானியெனும் பரம யோகி
யல்லைகாண் சொற்சொலவே வல்லை நீயே. (அஅ)

## நேரிசைவெண்பா.

நீயிருப்பப் புன்பொருட்கு நீசர்ப் புகழ்வாருந்
தூயிருப்ப வூன்விரும்பித் துய்ப்பாரு - நாயிருத்தல்
போலிருந்து நீணரகிற் போய்விழுவா ரோமயிலை
மேலிருந்து வாழ்முனிவா மேல். (அகூ)

## கட்டளைக்கலித்துறை.

மேலுக்கு நீவரம் பாயினை கூறில் வியனுலகிற்
கீழுக்கு நான்வரம் பாயினன் மேலெனக் கீழினுக்கு
மேலுக்கு நாப்பணின் றார்கீ ழெனச்சொல மேவுவர்காண்
கீழுக்கு நாடரி தாஞ்சீர் மயிலைக் கிரிமுனியே. (கூ0)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முனிப்புலி தொழுசிதம் பரங்கண் ணுற்றவர் முழைப்புலி முழங்குமவ் வருணை யங்கிரி, நினைப்பவ ரமலவா ரூர்ப்பி றப்பவர் நிகழ்த்தறு காசியிற் சென்றி றப்பவர், தனிப்பெரு முத்தியை யடைவர் தாங்களே தலைப்படு குவருயர் பதமுன் கச்சியை, யுனைப்பெயர் பகர்பவர் கேட்கின் றொரொடு முறைப்பரும் புகழ்ச்சிவ ஞான தேவனே. (கூக)

மறைமலை அடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# இதிலடங்கியபிரபந்தங்கள்.


| | | |
|---|---|---|
| | சிவப்பிரகாசசுவாமிகள் வரலாறு. | அஞ உ. |
| ௧. | சோணசைலமாலை. | ௫ |
| ௨. | நால்வர்நான்மணிமாலை. | |
| ௩. | திருச்செந்திலந்தாதி. | |
| ௪. | பழமலையந்தாதி. | |
| ௫. | பிக்ஷாடனநவமணிமாலை. | |
| ௬. | பெரியநாயகியம்மைவிருத்தம். | |
| ௭. | பெரியநாயகியம்மைகலித்துறை. | |
| ௮. | நன்னெறி. | |
| ௯. | திருவெங்கைக்கோவை. | ௬ |
| ௧௦. | திருவெங்கைக்கலம்பகம். | ௩௭ |
| ௧௧. | திருவெங்கையுலா. | |
| ௧௨. | இஷ்டலிங்கவபிஷேகமாலை. | ௧ |
| ௧௩. | ,, நெடுங்கழிநெடில். | |
| ௧௪. | ,, குறுங்கழிநெடில். | |
| ௧௫. | ,, நிரஞ்சனமாலை. | |
| ௧௬. | ,, கைத்தலமாலை. | |
| ௧௭. | சிவஞானபாலையதேசிகர் தாலாட்டு. | ௬ |
| ௧௮. | ,, நெஞ்சுவிடுதூது. | |
| ௧௯. | ,, திருப்பள்ளியெழுச்சி. | |
| ௨௦. | ,, பிள்ளைத்தமிழ். | |
| ௨௧. | ,, கலம்பகம். | |
| ௨௨. | இஷ்டலிங்கவகவல். | ௭ |

## துதிகவி.

புனையெழில்வடிவினுளோர்பொதுமகட்கண்டபை
மனமெனப்புலவர்கெஞ்சமருளுமின்றமிழ்ப்பாமா
றினவிடையவற்கேசாத்துஞ்சிவப்பிரகாசனென்
முனைவனெம்மடிகள்பாதமுளரிகள்சென்னிசேர்

### கைக்கிளை. மருட்பா.

தேவென் றறிந்தோஞ் சிவஞான தேசிகனை
யோவென் றெழுதுமருட் கண்களான் - மாவென்
றிமைக்கும் விழியா லிவனை
யிமைக்கு ளணங்கல னென்றறிந் தோமே. (கஉ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறிவதை யறிந்தார் மூவ ராறுமுகக் குரவன் றன்பான்
முறைவரு வருண முற்று முக்கணுன் குருவென் றன்பு
இசறிகிலன் மலய வெற்புச் செஞ்சடை முனிவன் யாக்கை
குறியவன் குறுகி லானெங் கோன்சிவ ஞானிதானே. (கஙு)

கலம்பகம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

---

### வாழ்த்து.

அருள்பொழி விழிகள் வாழி யறம்பகர் பவளம் வாழி
யிருள்புரா தமியே னுள்ளத் தெழுந்துபே ரொளியாய் நின்ற
குருபரன் காஞ்சி வாஞ்சை கொள்சிவ ஞான தேவன்
றிருவடி வாழி யன்னுன் றிருப்புகழ் வாழி வாழி.

சிவஞானபாலையதேசிகர் திருவடிவாழ்க.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

---

# பிழையும் திருத்தமும்.

☛ பிழைகளைத் திருத்திக்கொண்டே படித்தல் நலம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨ | ௧௦ | ௨ | முறைசாரு | முறைசாரும் |
| ,, | ௨௦ | ௧ | பராசாதத்துந் | பிரசாதத்துந் |
| ௬ | ௬௩ | ௧ | மெய்தாய் | மெய்தாப் |
| ௧௩ | ௪௯ | ௧ | மொழியா | மொலியா |
| ௧௮ | ௧௦௯ | ௨ | லிறந்து | வாளாவிறந்து (பாட |
| ,, | ௧௧௫ | ௧ | ரடியேனுஞ் | றடியேனுஞ் [ம் |
| ௨௦ | ௧௩௯ | ௨ | யடைக்குதலா | யடக்குதலா |
| ௨௩ | ௭௭ | ௧ | வுறைப்ப | வுரைப்ப |
| ௨௭ | குறிப்பு | ௨ | தொடிங்கி | தொடங்கி |
| ௩௮ | ௯ | ௫ | கோடு | கோடி [(பாடம். |
| ௪௦ | ௫ | ௭ | ...... | விழியாலஃதகற்றுப் |
| ௪௩ | ௪ | ௨ | டிறுநீறு | டிருநீறு |
| ,, | ,, | ௨ | நன்முக | பன்முக (பாடம்) |
| ௫௦ | ௫ | ௭ | றறியாத | றரியாத |
| ௫௧ | ௧௦ | ௩ | லாவமர் | லாதமர் |
| ௫௫ | ௯ | ௭ | மடிவரு | மடிவறு |
| ௫௯ | ௧௦ | ௭ | ...... | சித்திகள் வழாவெ ருவ (பாடம்.) |
| ௬௧ | ௫ | ௫ | பறம்பு | பரம்பு |
| ௬௨ | ௧௦ | ௨ | ...... | லுலகெனவமிழ்த்து (பாடம்) |
| ௬௪ | ௪ | ௫ | வருவிரண் | வருமிரண் |
| ௬௮ | - | ௧ | கடலுள் | கடலுன் |
| ,, | - | ௧௦ | கெடவரு | கெடவடு |
| ௬௯ | - | ௪ | மாத | வாத |
| ௭௦ | ௪ | ௩ | வறிய | வகல (பாடம்) |
| ௯௬ | ௩௫ | ௨ | சிவஞான | சிவஞானி |